பொதுசன நூலகம்
திரவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்,

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

மலர் : 134
இதழ் : 18
பக்கங்கள் : 08
திகதி : 03.08.2010
விலை : 15.00/=

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு
Registered as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb.1876

# பாதுகாவலன்

# Paathukavalan

யாழ் மறைமாவட்டத்தின் உத்தியோகபூர்வ கத்தோலிக்க பத்திரிகை



# வழிபாட்டில் ஆர்வம் காட்டுதல் இறை உறவிற்கு வழி



## - வாராந்த மக்கள் சந்திப்பில் திருத்தந்தை

13ம் நூற்றாண்டில் ஜேர்மனியின் ககேபோனில் வாழ்ந்தவர் புனிதை மெற்றில்டா. இவரின் எடுத்துக்காட்டான வாழ்வைப் பற்றி வாராந்தம் நிகழும் தனது மக்கள் சந்திப்பின்போது விபரிக்கையிலேயே திருத்தந்தை 16ம் பெனடிக்ற் மேற்கண்டவாறு கூறினார். பல ஆயிரம் மக்கள் கூடியிருந்த தூய பேதுருவானவர் சதுக்கத்தில் தொடர்ந்து மக்களுக்கு உரையாற்றுகையில் " என் அன்பார்ந்த நண்பர்களே! தனிப்பட்ட வாழ்வின் செபம் மற்றும் வழிபாட்டு செபங்கள், மிகச்சிறப்பாகத் திருப்புகழ் மாலையும் திருப்பலியும் இப் புனிதை மெற்றில்டாவின் இறை அனுபவத்தின் வேர்களாக இருக்கின்றன. இறைவார்த்தை – திவ்விய நற்கருணை இவை இரண்டாலும் தான் வழிநடாத்தப்பட தன்னை அனுமதித்ததினால் தான் இறைவனுடன் நெருக்கமான ஓர் உறவைப் பேணும் வழியைப்பின்பற்ற அவளால் முடிந்தது.

இவளுடைய எடுத்துக்காட்டான வாழ்வு சமகால கிறிஸ்தவர்கள் தமது இறைவனுடனான நட்பை ஆழப்படுத்திக்கொள்ள உதவமுடியும். சிறப்பாக நாளாந்த செபத்தின் மூலமும் திருப்பலியில் ஈடுபாட்டுடன் பங்கெடுப்பதன் மூலமும் இறை உறவைக் கட்டியெழுப்ப முடியும்"என்றார்.

## முத்திப்பேறு நிலைக்கு உயர்த்தப்பட்ட குரு

டகாயு என்னுமிடத்திலிருந்த நாசிப்படைகளின் சித்திரவதை முகாமில் கொல்லப்பட்ட ஜேர்மனியை சேர்ந்த ஒரு குரு, அவரது மனத்துணிவிற்காகவும் இறைவனில் கொண்ட நம்பிக்கைக்காகவும் ஜேர்மனியிலுள்ள முன்ஸ்ரர் எனுமிடத்தில் முத்திப்பேறு நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

## கரித்தாஸ் - கியூடெக் புதிய கட்டடத் திறப்பு விழா

மறைமாவட்டத்தின் தொண்டு நிறுனமாக ஏறக்குறைய 50 ஆண்டுகளாக பணியாற்றி வரும் கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்திற்கு ஒரு புதிய கட்டடம் 02-06-2009ல அடிக்கல் நாட்டப்பட்டு இரண்டு மாடிகள் நிர்மாணிக்கப்பட்டு, யாழ் ஆயர் அவர்களால் 29-09-2010 அன்று திறந்துவைக்கப் பட்டுள்ளது.



இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட ஆயர் அவர்கள் தமது உரையில், "சிறுகச் சிறுக பணிசெய்து இன்று பெரு விருட்சமாக வளர்ந்து நிற்கிறது கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம்" என்று புகழாரம் சூட்டினார்.

(தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க)

## பற்றீஷியன் தொழிற்பயிற்சி நிறுவனங்களின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

### 100ற்கு மேற்பட்ட மாணவர் சான்றிதழ் பெற்றனர்



பாடசாலைக் கல்வி முடித்த பின், தொழிற் கல்வியில் ஈடுபட விரும்பும் இளைஞர், யுவதிகளுக்கென அருட்தந்தை அமரர் மதுரநாயகம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பற்றீஷியன் கத்தோலிக்க தொழிற்கல்வி நிறுவனம், பல இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்கான வழிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அந்த வகையில் 2008 - 2010 ஆண்டுகளில் இந்நிறுவனத்தின் பயிற்ச்சி பெற்ற 100ற்கு மேற்பட்ட ஆண் பெண் பயிற்ச்சியாளர்கள் தொழில் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். அதற்கான தகுதிச் சான்றிதழ் 29-09-2010 அன்று ஆயர் தலைமையில் வழங்கப்பட்டன. பதிவாளர் திரு. தனசிங்கம், மற்றும் நிர்வாக உத்தியோகஸ்த்தர்கள் இந்நிறுவனத்தை நன்முறையில் வழிநடத்தி வருவதையிட்டு ஆயர் தமது உரையில் அவர்களைப் பாராட்டினார்.

## திருக்குடும்ப கன்னியர் மட உயர்தர பாடசாலை யாழ்ப்பாணத்தின் ஐந்தாவது தேசிய பாடசாலையாக தரமுயர்வு



யாழ்நகரின் மத்தியில் அமைந்துள்ள திருக்குடும்ப கன்னியர் மட உயர்தரப் பாடசாலையானது 05.08.2010 அன்று தேசிய பாடசாலையாக (National School) கல்வியமைச்சினால் தரமுயர்த்தப்பட்டுள்ளது. இது யாழ்ப்பாணத்தின் 5வது தேசிய பாடசாலையாகும்.

இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வை மகிழ்வுடன் நினைவு கூரும் முகமாக 30.09.2010 அன்று யாழ் திருக்குடும்ப கன்னியர் மட உயர்தர

(தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க)

## வேரித்தாஸ் வானொலி நேயர்களே! உறவுச் சங்கமம் - 2010

சில ஆண்டு இடைவெளியின்பின் வேரித்தாஸ் ஆசிய வானொலி தமிழ்ப்பணியின் உறவுச் சங்கம நிகழ்வை யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்துள்ளோம்.

இடம் : மறைக்கல்வி நடுநிலையம், பிரதான வீதி, யாழ்ப்பாணம்
காலம் : 02 ஐப்பசி 2010, சனிக்கிழமை, காலை 9.00

இந்நிகழ்வில் வேரித்தாஸ் வானொலி தமிழ்ப்பணி நிகழ்ச்சி ஒருங்கமைப்பாளர் அருட்பணியாளர் ஜெறோம் குழந்தைசாமி அவர்கள் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் நடந்த உறவுச்சங்கம நிகழ்வில் பங்கேற்றோரும், புதிதாக வேரித்தாஸ் வானொலி தமிழ்ப்பணியின் உறவுச் சங்கமத்தில் இணைய விரும்புவர்களும் தவறாது வருகைதரும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்பிற்கு : அருட்பணி. யோ. போல் றொகான்
சமூகத்தொடர்பு ஆணையம் ஆயர் இல்லம், யாழ்.

## கலந்தாய்வரங்கிற்கு அழைப்பு

யாழ் சமூகத்திலும், திருச்சபையிலும், குறிப்பாக கத்தோலிக்க பொது நிலையினர் மத்தியிலும் சமூக மெய்மைகள் மட்டிலான இறையாட்சிப் பார்வையை ஆழப்படுத்தும் நோக்கிலான கலந்தாய்வரங்கு ஒன்று, பொதுநிலையினர் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம்.

இடம் : மறைப்பணி நிலையம், பிரதான வீதி
காலம் : 04-10-2010 (திங்கள்) பி.ப 4.15 மணி
விடயம் : சமகால அரசியல் போக்குகளும் தமிழ் மக்களின் நிலையும்
பேச்சாளர் : திரு. அ. யோதிலிங்கம் (அரசியல் ஆய்வாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்

# தராசுகள்

தனிமனிதனின் - இப் பிரபஞ்சத்தின் பௌதீக இயங்கு நிலைக்குச் "சமநிலை" அவசியம் என்பது அறிவியல் ஆய்வுகளின் தீர்க்கமான முடிவு.

அவ்வாறே தனிமனிதனதும் - சமூகத்தின் இயல்பான இருப்பிற்கும் சமூகம் சார்ந்த இயல்பான செயற்பாடுகளுக்கும் நடுவு நிலைமை ஓர் உயிர்ப்பகுதியாகத் தேவைப்படுகிறது. இதுவே சமூக நீதியெனப்படுகிறது.

"உலகம் படைக்கப்பட்டபோது ஆவியானவர் தண்ணீரின்மீது அசைவாடிக்கொண்டிருந்தார்" (தொ.நூ. 1:2b) என்கிறது வேதம். இந்த ஆவியானவரே நீதியினதும், உண்மையினதும், நடுவு நிலைமையினதும் உந்துசக்தியாக இவ்வுலகில் செயற்படுகிறார். இறைவாக்கினர்கள் அநீதியான அரசுகளையும, பாவம் பெருகிய மக்களினங்களையும் சாடுவதற்கு மூலகாரணியாக இருந்தவர் இவரே. இதனால் தான் "அவர்கள் நேர்மையாளர்களை வெள்ளிக்காசுக்கும் வறியவரை இருகாலணிக்கும் விற்கிறார்கள், (ஆமோ. 2:6 b) என்று ஆமோசால் விசனப்படமுடிகிறது. வக்கிர சிந்தனைகொண்ட – அதிகாரம் கொண்ட மனிதர்களின் பிடியிலிருந்து தானியேல் ஓர் அபலைப்பெண்ணைக் காப்பாற்றிய பின்னணியில் இருந்ததும் இந்த வல்லமையே.

அரசன் என அறிந்திருந்தும் அவனால் வரக்கூடிய சாத்தியமான அனைத்து அச்சுறுத்தல்களையும் ஊகித்திருந்தும் "உன் சகோதரன் மனைவியை வைத்திருப்பது முறையல்ல" (மத்.14:4) என உண்மையுரைத்த திருமுழுக்கு யோவானிடத்தில் ஆவியின் திடமும் துணிவும் சற்று அதிகமாகவே இருந்திருக்கிறது.

புதிய ஏற்பாட்டில் இயேசு அதிகாரம் கொண்ட யூதமத – சமூக பாவக்கட்டமைப்புக்களுடன் தொடர்புகளைப் பேணாது முரண்பாட்டு – எதிர்ப்புப் போக்கையே கடைப்பிடித்தவராகக் காணப்பட்டார். உறவைப் பேண வேண்டும்; சுமுகமாகப் பணியாற்றவேண்டும் என்பதற்காக ஏழைகள்; நலிந்தவர்கள் மீது தமது வல்லாதிக்கத்தைச் செலுத்தியவர்களுடன் இயேசு ஒருபோதும் சமரசம் செய்துகொண்டதில்லை.

மாறாக அநீதி இழைக்கப்பட்டவர்களுக்காக, அவலத்தைத் தந்தோரின் நட்புக்களை பேணவிரும்பாத ஒரு மக்கள் பணியாளனாகவே இயேசு அறியப்பட்டார்.

இது ஒடுக்கப்படுவோர்; ஏழைகள், வலுவற்றவர்கள் சார்பாக எழுந்தொலிக்கும் கடவுளால் ஏற்படுத்தப்பட்ட குரலொலியே.

இன்று ஒட்டுமொத்தமான தமிழினத்திற்கு ஓர் இறைவாக்கினர் கூட இல்லாமல் போய்விட்டனர் என்பது ஒரு கசப்பான செய்தியே. பட்டப்பகலில் ஒரு வரலாற்றுப் பேரனர்த்தம் நடந்து முடிந்திருக்கிறது. சொல்லெண்ணா வலிகளையும் வார்த்தை விதிகளைமீறிய துயரங்களையும் மக்கள் சந்தித்திருக்கிறார்கள். ஒரு பெரும் நெருப்பாற்றைக் கடந்த பின்னர் காலம் மெல்ல நகரத்தொடங்கியிருக்கிறது.

மீண்டும் புதிதாய் வாழ்க்கையைத் தொடங்கப் போன மக்களுக்கு பொதுவாக எல்லாமே பழைய வாழ்க்கை தான். இழந்த உயிர்கள், உடமைகள், மனதில் ஏற்பட்ட ஆறாத காயங்கள் - இவற்றை உலகம் மறக்கத் தொடங்கினாலும் அதற்குப் பலியானவர்களின் நிலை இன்னும் பெரிதும் கவலைக்கிடமாகவே உள்ளது.

இந்நிலையில் மன்னிப்போம் மறப்போம் என்ற பதங்கள், மாலைகள், ஒருமைப்பாட்டு முனைப்புகள், வலிந்த புன்னகைகள், சுற்றுலாக் கலாச்சார அறிமுகங்கள் ஒரு புதிய வரவாக இங்கே அவசர அவசரமாக முளைத்த நாகரீகங்கள் தான். இவை நல்லவையே.

ஆனால் அனைத்தையும் இழந்து நிற்கின்ற மக்களுக்கு யார் நீதி வழங்குவார்? எப்போது அவர்கள் பரிகாரம் செய்வர்?

# இலங்கை அப்போஸ்தலர் ஜோசப் வாஸ்

13ம் பகுதி (நவாலியூர் நாயகி)

அழகிய ஆடை ஒன்றை அரசனுக்கு விற்பதற்கு
அரண்மனைக்குச் சென்றவன் கத்தோலிக்க சிற்பி
ஆடையின் கவர்ச்சியால் கவரப்பட்ட மன்னன்
விலை என்னவென்று அவனிடம் கேட்டான்

"விலை ஏதும் தேவையில்லை ஜோசப்வாஸ் அடிகளை
சந்திக்க அனுமதித்தால் போதும்" என்றான் சிற்பி
மதத்தில் அவன்கொண்ட பற்றை வியந்த மன்னன்
அடிகளைச் சந்திக்க அனுமதி அளித்தான் அனைத்து மக்களுக்கும்

சிறையில் இருந்துகொண்டே அருட்சாதனம் வழங்கி
அனைவர்க்கும் திருத்தொண்டு செய்து வந்தார் 'வாஸ்' அடிகள்
இரண்டு வருடகால சிறைவாசம் முடிந்த பின்
நிபந்தனையுடன் அவர் விடுவிக்கப்பட்டார்



கண்டி நகரை விட்டு வெளியே செல்வதற்கு
முடியாத அடிகள் மக்களின் உதவியுடன்
ஆலயம் ஒன்றமைத்து வழிபாடு செய்து
நோயுற்றோர் முதியோரை வீடுகளில் தரிசித்தார்

நிபந்தனையை மீறி கண்டிக்கு வெளியிலும்
திருமறையைப் போதித்தார் கடவுள் துணையுடன்
குறுகிய காலத்தில் கண்டியில் திருச்சபை
பரந்து விரியக்கண்ட பிரமுகத்தினர் மனம் திரும்பினர்

'கனரேன்' என்பவன் மன்னனை அணுகி
அடிகளுக்கெதிராய் புகார் பல செய்தும்
மன்னன் மனம் மாறாமை கண்டு
பௌத்தர்கள் பலருடன் கூட்டுச் சேர்ந்தான்

(தொடரும்)

## - அறிந்துகொள்ளுவோம் -

திருச்சபையை வழிநடத்திய பாப்புமாரின் சுருக்கமான சரிதைகள்

## புனித 1ம் விக்ரர் – Saint Victor I

இவர் வட ஆபிரிக்க நாட்டைச் சேர்ந்தவர். ஆகவே கிரேக்கமொழி அதிகம் பேச இயலாதிருந்தார். இவருடைய காலத்திலிருந்து தான் உரோமைத் திருச்சபை மொழி கிரேக்கத்திலிருந்து இலத்தீனுக்கு மாற்றமடைந்தது. இவர் காலத்தில் இருந்த கொமோடஸ் சக்கரவர்த்தி கிறிஸ்தவர்களின் நண்பனாயிருந்தான். ஆகவே பாப்பரசர் மார்க்குஸ் அவுரேலியஸ் சக்கரவர்த்தியினால் வெள்ளிச் சுரங்கங்களுக்கு அனுப்பப்பட்ட கிறீஸ்தவர்களை கொமோடஸ் சக்கரவர்த்தியைக் கொண்டு விடுவித்தார். உயிர்ப்பு ஞாயிறு தினத்தைப் பற்றிய சர்ச்சையைத் தீர்த்து வைத்தவர் இவர்தான். இவர் செப்திமுஸ் செவறஸ் ஆட்சிக் காலத்தில் அதாவது கி.பி 199ம் ஆண்டு வேதசாட்சியாக மரித்தார்.

## தூயவர்களின் வரலாறு

அக்டோபர் –03 – முத்திப்பேறு பெற்ற இமெல்டா (14ஆம் நூற்றாண்டு)

இவளது பெயரின் பொருள் 'போய் தேன் கொடு' என்பதாகும். 10 வயதில் புனித சுவாமிநாதர் சபை மடம் ஒன்றில் சேர்ந்தாள். கன்னியாஸ்திரி ஆகாவிட்டாலும் கன்னியர் உடையைப் பெற்றுக் கொண்டாள். திவ்விய நற்கருணையில் இருக்கிற இயேசுவை இவள் மிகவும் நேசித்தாள். அவரை உட்கொள்ள ஆசித்தாள். பதினான்கு வயதுக்குப் பின்னரே அந்தக் காலத்தில் சிறுவர்களுக்கு புது நன்மை கொடுப்பார்கள். இவளுக்கோ அந்த வயது இன்னும் வரவில்லை.

ஒரு நாள் காலையில் இவள் திருப்பலி காண கோயிலுக்கு சென்றாள். திருப்பலி முடிந்து விட்டது. இவள் கோவிலில் முழந்தாளிட்டிருந்தாள். கன்னியர் திவ்விய நன்மை வாங்குவதை இவள் கண்டாள். அந்தப் பாக்கியம் தனக்குக் கிடைக்கும்படி ஆசித்தாள். திடீரென்று ஒரு பரலோக மணம் கோயிலை நிரப்பியது. காரணம் என்னவென்று அறிய கன்னியர் கோயிலுக்கு வந்தார்கள். அவர்கள் கண்ட காட்சி அவர்களை பிரமிக்கச் செய்தது. இமெல்டா முழந்தாளிட்டிருந்தாள். அவளுடைய சிரசுக்கு மேலே சற்பிரசாத அப்பம் ஒன்று நின்றது. இயேசு அவளைத் தேடி வந்திருந்தார். உடனே குருவை கூப்பிட்டார்கள். அவர் திரு உடைகளை அணிந்து கொண்டு விரைந்து வந்து முழந்தாளிட்டார். பூசைப் பாத்திரத்தோடு இருக்கும் தட்டை திரு அப்பத்திற்கு கீழே ஏந்தினார். திரு அப்பம் கீழே இறங்கி வந்து தட்டில் தங்கியது. பரவசத்தில் இருந்த இமெல்டாவுக்கு திவ்விய நன்மையை குரு கொடுத்தார்.

"சகோதரி, திவ்விய நன்மை வாங்கிய பின் இயேசு உங்கள் உள்ளத்தில் வந்த பிறகு நீங்கள் சாகாமல் இருக்கிறது எப்படி?" என்று இவள் முன்னர் திவ்விய நன்மை வாங்கிய சகோதரிகளிடம் கேட்பாள்.

சற்று பின் இவளைக் கூப்பிட வந்தார்கள். இவளோ பரலோக பர்த்தாவிடம் போய்விட்டாள்.

# சிந்தனைத் தூறல்கள் – 10

## – ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே –

### அப்துல் ரகுமானின் – சிறகுகளின் நேரம்

அதற்கு அவர் சொன்ன பதில் என்ன தெரியுமா?

'சாப்பாடு எப்போதும் தான் சாப்பிடுகிறோம். சினிமா அப்படியா? நல்ல படமாய் எடுத்துவிட்டால் என்ன செய்வது? அதனால்தான் போகிறோம்'.



ஆதி மனிதன் முதலில் வீட்டில் வைத்து வளர்த்தது செல்லப் பிராணிகளைத்தான். பிறகுதான் ஆடு, மாடு.

சரியாகச் சொல்வதானால் மனிதன் விளையாட்டுத்தனமான நேரங்களால் உருவாக்கப்பட்டவன்.

முதலில் குழந்தை; பிறகுதான் பெரிய மனிதன்.

ஆதி மனிதன் வாழ்க்கையிலும் முதலில் விளையாட்டு பிறகுதான் எல்லாம்.

விளையாட்டுக்களில்தான் மனிதனுடைய பல விதமான திறமைகள் வெளிப்படுகின்றன.

மனிதன் மட்டும் விளையாடவில்லை. இறைவனும் விளையாடுகிறவனாகவே இருக்கிறான்.

படைத்தல், காத்தல், அழித்தல் இவை இறைவனுடைய விளையாட்டு (லீலை) என்கின்றனர் வைணவர்.

உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்,
நிலைபெறுத்தலும், நீக்கலும், நீங்கலா
அலகிலா விளையாட்டு உடையார் அவர்,
தலைவர்.

என்கிறார் கம்பர்.

அடியார் துயர் தீர்க்க ஆண்டவன் உலகுக்கு வந்து ஆற்றும் பணிகளைத் திருவிளையாடல்கள் என்கின்றனர் சைவர்.

கலைகள் பாவம் என்பது கீழை நாட்டுச் சமயங்கள் சிலவற்றின் கொள்கை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைவிடப்பட்டோரின் பாதுகாவலர்

# திருத்தூதரான புனித யூதா

அருள்திரு இராசேந்திரம் ஸ்ரலின்



**அறிமுகம் :** புனித யூதா திருத்தூதர்களில் ஒருவர். இவர் கைவிடப்பட்டோரின் காவலர், நம்பிக்கையிழந்தோரின் பாதுகாவலர் என்றெல்லாம் அழைக்கப்படுகின்றார். இவரது பெயர் இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாஸ் ஸ்கரியோத்தின் பெயர் போன்று அமைந்ததால் நீண்ட காலமாகக் கவனத்தில் எடுக்கப்படாத ஒருவராகவே இவர் விளங்கினார். இதனால் மறக்கப்பட்ட புனிதர் என்றும் அழைக்கப்பட்டார். புனித யூதா நம் ஆண்டவர் இயேசுவின் உறவினராயிருந்ததோடு அவரின் தோற்றத்தை ஒத்தவராகவும் விளங்கினார். இவரதும் புனித சைமனதும் திருநாட்கள் ஒன்றாக ஐப்பசி 28ம் திகதி கொண்டாடப்படுகின்றது.

### புனித யூதாவின் பெயர்கள்

யூதா என்பது யூதர்கள் மத்தியிலே பரவலாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு பொதுவான பெயராகும். இவரது பெயரானது கிரேக்கச் சொல்லான (*Ιούδας*) கிரேக்கப் புதிய ஏற்பாட்டில் காணப் பட்டது. இதுவே பின்னர் யூதா அல்லது யூதாஸ் என மொழிபெயர்க்கப்பட்டது. இவர் யாக்கோப்பின் யூதா (Jude of James -லூக் 6:16, திப 1:13), யூதாததேயுஸ் (Jude Thaddaeus) யூதாஸ் ததேயு (Judas Thaddaeus), யூதாஸ் லெப்பாயுஸ் (Judas Lebbaeus) என்றும் அழைக்கப்படுகின்றார். இவரை இயேசுவின் சகோதரன் என்றும் சிலர் அழைத்ததுண்டு. நீதிமானான ததேயு என்றும் லீபாய் ஸ்லீஹா (Lebai Sleeha) என்றும் அழைக்கப்பட்டார். ததேயுஸ் என்றால் இனிமையானவர், பாசமுள்ளவர், கனிவானவர், துணிவானவர், வள்ளல்தன்மை கொண்டவர், என்று பொருள்.

### புனித யூதாவின் குடும்பம்

பாரம்பரியக் கதையின்படி புனித யூதா கலிலேயாவிலுள்ள பானியாஸ் (Paneas) எனப்படும் இடத்தில் யூதக் குடும்பத்தில் பிறந்தவர். இவரது தந்தை குளோப்பாஸ் உயிர்த்த இயேசுவில் மிகுந்த பக்தி கொண்டவராக விளங்கியதால் அவர்பற்றி வெளிப் படையாகத் துணிச்சலோடு போதித்து வந்தார். இது யூதர்களை எரிச்சலூட்டியதால் அவரைக் கொலை செய்தார்கள். இவ்வாறு அவர் மறைசாட்சியாக இறந்தார். இவரது தாய் கன்னிமரியாளின் ஒன்றுவிட்ட சகோதரியாகிய மேரியாவார். இயேசு இறந்த போது சிலுவையடியில் இவரும் நின்றவர். அவர் இறந்தபின் அவரது உடலுக்கு திருத்தைலமிட்டவர். இம்மேரி இறந்த பின்னர் இவரது பரிந்துரையால் பல புதுமைகள் நடந்தன. அத்தகைய ஆழமான நம்பிக்கை கொண்ட குடும்பமாக புனித யூதா பிறந்த குடும்பம் விளங்கியது. இவரது சகோதரன் இளைய யாக்கோபு (James, the minor). புனித யூதா விவசாயத்தில் ஈடுபட்ட யூதா குலத்தைச் சார்ந்தவராக இருந்ததால் அவரும் ஒரு விவசாயி என்று கருதப்படுகின்றது. இவர் ஒரு கடற்தொழிலாளி என்ற கருத்தும் நிலவுகின்றது. புனித யூதா பிறந்து வளர்ந்த பிரதேசத்திலுள்ள மக்கள் அன்றைய காலகட்டத்தில் கிரேக்கம், அரமேயம் ஆகிய மொழிகளைப் பேசியமையால் இவரும் இவற்றையே பயன்படுத்தியதாகக் கருதப்படுகின்றது. பதினான்காம் நூற்றாண்டு எழுத்தாளரான நிசுபோறஸ் கல்லிஸ்ரஸ் (Nicephorus Callistus) இவரே கானாவூர்த் திருமணத்தில் மணமகனாக விளங்கியவர் என்று குறிப்பிட்டுள்ளார்.

### புனிதரின் பணித்தளங்கள்

புனித யூதா யூதேயா, சமாரியா, இதுமேயா, சிரியா, மொசப்பத்தேமியா, லிபியா ஆகிய நாடுகளில் நற்செய்தியைப் போதித்து வந்தார். மேலும் இவர் பெய்றூட், எடிஸ்ஸா ஆகிய நகரங்களில் போதித்தாகவும் கூறப்படுகின்றது. இவரும் திருத்தூதரான புனித பார்த்தலேமியுவுமே ஆர்மீனியாவில் முதல் முறையாக நற்செய்தியைப் போதித்தனர் என்ற பாரம்பரியக் கதை உண்டு. இதனால் அவர்கள் ஆர்மீனிய அப்போஸ்தலிக்கத் திருச்சபையின் பாதுகாவலர்களாக விளங்குகின்றனர். எடிஸ்சா நகர மக்களை மனந்திருப்பிய பின்னர் மொசப்பத்தேமியாவின் பல பகுதிகளுக்கும் சென்று நற்செய்தியைப் போதித்து மக்களை மனம் மாற வைத்தார். மேலும் இவர் தெற்கு ரஷ்யாவிலும் பணியாற்றியதாக வாய்மொழிக் கதைகள் உண்டு.

திருத்தூதர்களின் ஜெருசலேம் திருச்சங்கத்திற் கலந்து கொண்ட பின்னர் அவர் லிபியாவில் புனித சீமோனைச் (பேதுறு அல்ல) சந்தித்து இருவரும் அங்கு நற்செய்தியைப் போதித்தனர். அங்கு பலர் மனம் மாறித் தம் தீய வழிகளைக் கைவிட்டதோடு ஏனைய கிறிஸ்தவர்களையும் மதித்தனர்

### புனிதர் பணிக்கு மந்திரவாதிகளின் தடைகள்

பேர்சிய (பாரசீகம்) நாட்டில் சாறோஸ் (Zaroes), ஆர்பக்ஸாற(Arfaxat) என்ற இரண்டு மந்திரவாதிகள் இவர்களது பணிக்குத் தடையாக இருந்தார்கள். அத்தோடு இவர்களை ஏமாற்றுக்காரர்கள் என்றும் தூசித்தனர். ஆனால் இம்மந்திரவாதிகள் பயன்படுத்திய சிலைகளுள் மறைந்திருந்து செயலாற்றிய பேய்கள் திருத்தூதர்களைக் கண்டதும் மந்திரவாதிகள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்க மறுத்தன. மேலும் பெருங்கூச்சலிட்டு வெளியேறி அச்சிலைகளை உடைத்தெறிந்தன. அப்பேய்கள் திருத்தூதர்களே உண்மையான கடவுளின் சீடர்கள் என்றும் பகிரங்கமாக அறிக்கையிட்டன.

### பேர்சிய இராணுவத் தளபதியின் மனமாற்றம்

அதன் பின்னர் இரு திருத்தூதர்களும் பேர்சிய இராணுவத் தளபதியாகிய பறாடாச்சிட (Baradach) சென்ற போது அவர் தம் படையோடு இந்தியாவுக்குப் படையெடுக்க ஆயத்தம் செய்து கொண்டிருந்தார். அங்கேயும் அதே மந்திரவாதிகள் இருவரும் வந்திருந்தனர். அப்போது யுத்தம் வெற்றியிலா தோல்வியிலா முடியும் என்பதை அறியத் தளபதி விரும்பினார். அவர் இரு திருத்தூதர்களையும் "உங்கள் முன்னால் எமது தெய்வங்களின் சிலைகள் விழுந்து நொருங்கிப்போனதால், எங்கள் தெய்வங்களைவிட உங்கள் கடவுள் மேலான ஆற்றல் கொண்டவர் என்று நாம் அறிவோம். யுத்தத்தின் பின்னர் உங்கள் போதனையைக் கேட்போம். ஆனால் இப்போதோ நாங்கள் இந்த யுத்தத்தில் வெற்றிபெறுவோமா இல்லையா எனச் சொல்லுங்கள்" என்று தளபதி கேட்டுக் கொண்டார். அப்போது திருத்தூதர்கள் மந்திரவாதிகளின் பேய்களைப் பதில் சொல்லுமாறு கேட்டனர். அதுவோ இந்த யுத்தம் நீண்டநாள் எடுக்கும் இதில் எண்ணுக்கணக்கற்றோர் பலியாவர். "என்று பொய் கூறின. ஆனால் திருத்தூதர்களோ, "அரச குமாரனே. நீர் பயப்படவேண்டாம். அவர்களது பேய்கள் பொய் சொல்லுகின்றன. நாளை இதே நேரம் இந்தியாவிலிருந்து தூதர்கள் வந்து சமாதான உடன்படிக்கை செய்வார்கள்;" என்று இறைவாக்குரைத்தனர். அவர்கள் சொன்னவாறே மறுநாள் யுத்தமின்றிச் சமாதான உடன்படிக்கை கைச்சாத்தானது. மந்திரவாதிகளின் பொய் இறைவாக்கால் ஆத்திரமடைந்த தளபதி அவர்கள் இருவரையும் திருத்தூதர்களுக்கு எதிராகச் செயற்பட்ட அனைவரையும் உயிரோடு நெருப்பிலிட்டுக் கொல்லுமாறு கட்டளையிட்டான். ஆனால் திருத்தூதர்களோ அவர்களுக்காகப் பரிந்துபேசித் தண்டனையிலிருந்து தப்புவித்தனர்.

### எடிசா அரசனைக் குணமாக்கியமை

எடிஸ்சா என்பது தற்போதைய துருக்கி நாட்டின் நகர்களில் ஒன்றான உர்பாவாகும் (Urfa). பாரம்பரியக் கதையின்படி, இதனை ஆண்ட அன்றைய அரசனான அப்கார் (King Abgar of Edessa) தொழுநோயால் பாதிக்கப்பட்டிருந்தார். இயேசுவின் புதுமைகளைப் பற்றிக் கேள்வியுற்ற அவர், தன்னை வந்து குணமாக்கும்படி வேண்டி இயேசுவிடம் ஒரு தூதுவரை அனுப்பினார். தானே அந்நேரத்தில் அரசனிடம் செல்ல முடியாததால் இன்னொருவரை இதற்காக அனுப்புவதாக இயேசு செய்தி அனுப்பினார். இவ்வாறு இயேசு உடனே வராததால் தன் உடல் நலமின்மைபற்றிக் கலங்கிக் கொண்டிருந்த அரசன் ஒரு ஓவியனை அழைத்து இயேசுவின் திருவுருவத்தை ஓவியமாக வரைந்து வருமாறு அனுப்பி வைத்தார். இயேசுவின் முகத்தில் வீசிய திருஒளி காரணமாக ஓவியரால் இயேசுவின் முகத்தை உற்றுப் பார்த்து வரைய முடியவில்லை. இதனால் ஓவியர் கலங்கிக் கவலையுற்ற போது இயேசு அவர்மீது இரங்கி, அவர் கொண்டு வந்திருந்த துணியை வாங்கி அதில் தன் முகத்தைப் பதித்து புனித யூதாவிடம் கொடுத்து அனுப்பினார். இயேசுவின் இத்திரு உருவத்தைக் கண்ட அரசன் மிகவும் மகிழ்வுற்றான். இயேசு இறந்து விண்ணேற்பு அடைந்த பின்னர் புனித யூதா அவ்வரசனிடம் சென்று அவரைக் குணமாக்கினார். அவர் இயேசுவின் வாழ்வு, நற்செய்தி என்பனவற்றைத் தெளிவாக எடுத்துரைத்ததைக் கேட்ட அரசனும் அவன் வீட்டாரும் அவர் ஆட்சிக்குட்பட்ட அனைத்து மக்களும் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினர். இக்கதையிலிருந்தே புனித யூதாவின் உருவப்படங்களில் இயேசுவின் சாயலைத் தாங்கியவராகக் காட்சியளிக்கின்றார்.

### புனிதரது மறைசாட்சியம்

இயூசேபியஸ் (Eusebius) எனும் யூத வரலாற்று ஆசிரியின் எழுத்தின்படி அவர் கி.பி. 44ம் ஆண்டு மொசப்பத்தேமியாவில் மறைசாட்சியாக இறந்தார். ஆனால் இவரும் திருத்தூதர் தீவிரவாதியான சீமோனும் லெபனானின் தலைநகரான பெய்றூட்டில் கி.பி 65ஆம் ஆண்டு ஒன்றாக மறைசாட்சிகளாக இறந்தனர் என்ற கருத்தும் உண்டு. இருவரும் பொல்லால் அடித்துக் கொலை செய்யப்பட்டனர். பின்னர் அவர்களது தலைகள் கொய்யப்பட்டன. பாரம்பரியக் கதையின்படி புனித யூதாவின் உடலானது கிர்கிஸ்தான (Kyrgyzstan) பகுதியில் காணப்படும் இஸ்சிக்-குல் (Issyk-Kul) ஏரிக்கு வடக்கிலுள்ள தீவிலிருந்த ஆர்மீனிய துறவுமடத்தில் 15ம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. பின்னர் மக்கள் எவரும் போகாத பிரதேசமாக விளங்கிய பாமிர் (Pamir) மலைப் பகுதிக்கு மாற்றப்பட்டது. அங்கிருந்து உரோமைக்குக் கொண்டுவரப்பட்டு அங்கு புனித பேதுறு பேராலயத்திலுள்ள குகைச் சிற்றாலயத்தில் வணக்கத்திற்காக வைகைகப்பட்டது. இவரது திருப்பண்டங்கள் பிரான்சிலுள்ள றெய்ம்ஸ் (Rheims), துலூஸ (Toulouse) ஆகிய இடங்களிலும் வைக்கப்பட்டன.

### கைவிடப்பட்டோரின் பாதுகாவலர்

சுகநல நிலையங்கள், உடல் நல நிலையப் பணியாளர்கள் ஆகியோரது பாதுகாவலராகவும் இவர் விளங்குகின்றார். மேலும் உடல் நலமற்றோரைக் குணமாக்குபவராகவும் பேய்களை ஓட்டும் வல்லமை நிறைந்தும் விளங்கினார். அத்தோடு தீராத உடல்நலமின்மையால் பாதிக்கப்பட்டோர், தனிமையில் வாடுவோர், வறுமையில் வாடுவோர், மனச்சோர்வு கொண்டோர், நம்பிக்கையிழந்தோர், கைவிடப்பட்டதாக உணர்வோர், செய்வினை சூனியத்தால் பாதிக்கப்பட்டோர், குடும்பத்தில் துன்பம் அனுபவிப்போர் ஆகியோரின் பாதுகாவலராக விளங்குகின்றார்.

### இவரது உருவ அடையாளங்கள்




இவரது சுருவங்கள், படங்களில், கையில் கைத்தடி கொண்டு தலையில் நெருப்புச் சுவாலை கொண்டவராக காணப்படுகின்றார். இச்சுவாலை தூய ஆவியானவரின் வருகையின் போது ஏனைய திருத்தூதர்களோடு பிரசன்னமாக இருந்த உண்மையை விளக்குகின்றது. இவரது படங்கள் தாடியுடனான ஒருவர் தடிப்புடன் நிற்பது, தங்கூசி, வாள் என்பன கொண்டு காணப்படுவது முண்டு. இயேசுவின் உருவம் கொண்ட பதக்கம் அணிந்து தலையில் நெருப்புச்சுவாலையுடன் காணப்படுவதுமுண்டு. இவர் கோடாலை அல்லது ஈட்டிச் சுரளை அல்லது புத்தகத்தைத் தாங்கியவராகக் காணப்படுவது இவரே யூதாவின் திருமுகத்தை எழுதியதாக நம்பப்படும் பாரம்பரியத்தைப் பிரதிபலிப்பதாகவேயே. இவர் கோடரி அல்லது ஈட்டிக் கோடரி தாங்கியவராகக் காணப்படுகின்றமை அவர் மறைசாட்சியாகக் கொலை செய்யப்பட்டதை எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது. இன்னும் சிலவற்றில் இவர் தச்சரின் அடிமட்டத்தைத் தாங்கியவராகவும் காட்டப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# " நீதியின் குரல் " நூல் வெளியீடு

யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ. சிறில் அவர்கள் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரைகளை தொகுத்த "நீதியின் குரல்" எனும் நூலின் முதற்பிரதியை தொகுப்பாசிரியரும் கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தின் தலைவருமான துரை.ஆரோக்கியதாசன் யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் ஆயர் மேதகு கலாநிதி இ.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களுக்கு வழங்குவதை முதலாவது படத்திலும் இரண்டாவது பிரதியை இணைப்பாளர் அ. பீற்றர் யோகதாசன் (கனடா) யாழ்ப்பாண மறைமாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அடிகளாருக்கு வழங்குவதையும் மூன்றாவது படத்தில்





நிகழ்வில் கலந்து கொண்டு ஆசீர் வழங்கிய மலர்க்குழுவின் தலைவரும் "நெய்தல்" இயக்குநருமாகிய அருட்கலா நிதி அ.பி.சே.யெயசேகரம் அடிகளார், ஆயர இல்ல நிதி முகாமையாளர் அருட்பணி. J.B.அன்ரனிதாஸ் அடிகளார், மன்னார் மறைமாவட்டத்தின் "மன்னா" பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் அருட்பணி. தமிழ்நேசன் அடிகளாரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ. சிறில் அவர்களும் காணப்படுகின்றனர்.

## அணு ஆயுதம் அழிவுக்கு! அருள் ஆயுதம் வாழ்வுக்கு!!

**செபமாலைக் கன்னியர் அமலிவனம், அச்சுவேலி**

இயேசுவின் சிலுவையடியில் நின்ற வீர மங்கை மரியா மனுக்குலத்தின் தாயானாள். இந்த தாய்மையைப் பேற்றை பெற்றுக் கொண்ட மரியாள், மீண்டும் மீண்டும் வழி தவறி அழிவை நோக்கியே ஓடுகின்ற இந்த பழுக் குழுத்திலுள்ள ஒவ்வொரு தனி மனித உயிரின் மேலும் தனிப்பட்ட முறையில் அக்கறை கொண்டு ஏக்கத்துடனும் கண்ணீருடனும் எம்மைத் தேடிக்கொண்டிருக்கிறார். முன்பு சக்காலத்திலும் இல்லாத வகையில் தற்போது உலகில் பாவம் பரிணாமம் பெற்றுக்கொண்டிருக்கின்றது. இறை மறுப்புக் கொள்ளை, அதிகார வெறி, சிசுக்கொலை, இயற்கைக்கு மாறான சிற்றின்ப வேட்கை, பணவெறி, மதவெறி என்று இன்னும் பல நவீன மயப்படுத்தப்பட்ட நுகர்வுக் கலாச்சாரத்திற்கு அடிமைப்பட்டு உருக்குலைந்த நிலையிலுள்ள தன் பிள்ளைகளையெல்லாம் தன் இதயத்தில் சுமந்து தாங்கி வேதனையின் மத்தியிலும் வீரத்துடன் யேசுவின் சிலுவையடியில் மரியன்னை நின்று கொண்டிருப்பதை ஏனோ எம் ஊனக் கண்கள் பார்க்கத் தவறுகின்றன. எமது பொறுப்பற்ற அசமந்த பாவநிலையினால் நொறுங்குண்ட மரியாளின் இதயம் என்னிடம் கேட்பது என்ன? தன் ஒரே மகனை பலிகொடுத்து மீட்டுக்கொண்ட பிள்ளைகளை பலிகொடுத்து மீட்டுக் கொண்ட பிள்ளைகளை விழுங்கிவிட காத்திருக்கும் அரக்கப் பாம்பாகிய (திருவெளி. 12:4) சாத்தானிடமிருந்து காப்பாற்றி மீட்கும் அதி தீவிர பணியில் செபமாலை என்னும் சக்தி மிக்க ஆயுதத்தை கையிலேந்தி தன்னுடன் களத்தில் குதிக்குமாறு எம்மை கெஞ்சிக் கேட்கிறாள். அவள் பல தரிசனங்கள் மூலம் சிறுவர்களிடம் கேட்டுக் கொண்டது செபமும் பரித்தியாகமுமே. எனவே நிஜமற்ற கற்பனை உலகில் எம்மை கதிகலங்க வைக்கும் பயனற்ற பசப்பு வார்த்தைகளுக்கும், ஆசா பாசங்களுக்கும் எம்மனதை பறிகொடுத்து, நுகர்வுக் கலாச்சாரம் என்னும் சாத்தானால் விழுங்கப்படும் எம் பரிதாப நிலையை உணர்ந்து விழித்தெழுவோம். கையடக்க தொலைபேசி கூடவுள்ள செய்தியை பறைசாற்றட்டும். இறைவனின் பெயரில் நம்பிக்கை கொண்ட இளைஞன் தாவீது கவணாங்கற்களால் கோலியாத்தை அடித்து வீழ்த்தியது போல் (1சாமு. 17:49) எம் எதிரியாகிய சாத்தானை, செபமாலையைக் கையிலேந்தி முறியடிப்போம். படையின் முன்னணியில் வீர மங்கை மரியாள் எம்முடன் களத்தில் நிற்பது எம் படையின் பலத்தை உறுதிப்படுத்தட்டும். திருநூல் எம் மனதை திருடட்டும். திருச் செபமாலை எம் மனதை உருக்கட்டும். எம் கண்ணீர் மரியாளின் கண்ணீருடன் கரைந்தோடி பலகோடி மக்களின் பாவங்களை கழுவட்டும். எடுத்திடுவோம் திருசெபமாலையை இயக்கிடுவோம் மன்றாட்டுக் பரலை விரட்டிடுவோம் பாவப் பேயை அழித்திடுவோம். யேசுவின் அரசை அமைத்திடுவோம்." மரியாளின் மாசற்ற இதயம் வெற்றி பெறட்டும்.

## வன்னி கரித்தாஸ் கியுடெக் நிறுவனத்தின் வாழ்வாதாரப்பணிகள்

### துண்டுபட்ட மனிதனல்ல ஒன்று பட்ட மனித இனமே முன்னேற வேண்டும் - அருட்பணி . கனிசியஸ்றாஜ்



கரித்தாஸ் - கியூடெக் வன்னி நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள வாழ்வாதார உதவித்திட்டத்தின் கீழ் பொன்னாவெளி கிராமசேவையாளர் பிரிவில் இணைக்கப்பட்டிருக்கும் வேரவில் கிராமத்தில் முன்னுரிமைப்படுத்தப்பட்ட அடிப்படை வசதிகள் ஏதுவும் அற்ற 17 விவசாயக் குடும்பங்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வு திரு. றொபின்சனின் தலைமையில் 31-08-2010 செவ்வாய்க் கிழமை அன்று வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட உதவி இயக்குனர் அருட்தந்தை கனிசியஸ் ராஜ் அடிகளார் தமது உரையில் துண்டுபட்ட தனிமனிதனல்ல ஒன்றுபட்ட மனித குலம் முன்னேற வேண்டும் என்ற இலட்சிய நோக்கோடு பணிபுரியும் எமது நிறுவனத்தின் சார்பில் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நிறைவடைவதோடு தொடர்ந்த போரின் அனர்த்தங்களினாலும், உறவுகளின் பிரிவுகளினாலும் அடிப்படை வசதிகள் அனைத்தையும் இழந்த நிலையில் பல்வேறு துயரங்களை தாங்கி வேதனைபடும் உங்களுக்கு மீண்டும் ஒரு விடியலை தருவதற்காக உங்களுடைய விவசாயப் பணிகளை மீண்டும் தொடர்வதற்காக நீர் இறைக்கும் இயந்திரங்களை உங்களுக்கு வழங்குகின்றோம். இவ்வுதவியைக் கொண்டு உங்கள் பணிகளை ஆரம்பித்து முன்னேற்றமான பாதையிலே உங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இறையாசி வேண்டுகின்றேன் என்றார். இதைத் தொடர்ந்து நிறுவனத்தின் செயற்திட்ட இணைப்பாளர் திரு. ப. துரைரெட்ணம் அவர்கள் தனது உரையில் நாம் மேற்கொண்ட இவ் உதவியின் வழியாக உங்களுடைய பணிகளை ஆரம்பித்து நிறைவுடனும் பொருளாதார கஷ்ரங்களில் இருந்து பாதுகாக்கப்பட்டவர்களாகவும் நீங்கள் வாழவேண்டும் எனவும் இதற்கான உங்களுடைய முயற்சிகளை துரிதமாக முன்னெடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். இதனைத் தொடர்ந்து திரு. ராஜ்கண்ணன் நன்றியுரை கூற இந்நிகழ்வில் பொன்னாவெளி கிராமசேவையாளர், வேரவில் சமூகசார அமைப்பு தலைவர், வேரவில் இராணுவப்பொறுப்பதிகாரி, வேரவில் பிரதேச மக்கள் நிறுவனத்தின் வாழ்வாதார செயற்திட்ட பணியாளர்களும் இணைந்து நிகழ்வை சிறப்பித்தார்கள்.

- என். எம். யோசவ் கியூடெக் பணியாளர்.

## 2 மில்லியன் மக்களை நிர்க்கதியாக்கிய நைஜீரியா வெள்ளப் பெருக்கில் பாதிப்புற்றவர்களுக்காக திருத்தந்தை மன்றாடுகிறார்

வடக்கு நைஜீரியாவில் பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதன்போது 2 மில்லியன் மக்கள் வீடற்றவராயினர், 40 பேர் வரை கொல்லப்பட்டனர். வயல்களில் அறுவடைகாலம் தொடங்குவதற்கு சற்று முன்னர் இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளதால் பயிர்கள் அழிந்து போயுள்ளன. பெரும் மனிதாபிமான நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்றும் ஆத்மார்ந்த ரீதியில் தாம் அவர்களுடன் ஒன்றித்திருப்பதாகவும் திருத்தந்தை 16ம் பெனடிக்ற் தனது மக்கள் சந்திப்பின் போது கூறியுள்ளார். இந்த வெள்ளப்பெருக்கால் பயிர்கள் அழிந்திருக்கும் நிலையில் மீண்டும் பயிர்களை பயிரிட முடியாத நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர் என கவலை தெரிவிக்கப்படுகிறது.

## திருத்தந்தையும் அங்கிலிக்கன் பேராயரும் பொதுவான கிறிஸ்தவ சாட்சியத்திற்கு அழைப்பு

திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்களும் கன்ரபரி அங்கிலிக்கன் பேராயர் றோவான் வில்லியம் அவர்களும், கத்தோலிக்கர்களும் அங்கிலிக்கன் சபையை சேர்ந்தவர்களும் சமூகத்திற்கு ஒன்றுபட்ட சாட்சியத்தைக் கொடுக்க வேண்டிய ஒரு தேவையை உறுதிப்படுத்தியபின், 11ம் நூற்றாண்டைச் சேர்ந்த கிறிஸ்தவ மன்னனுடைய கல்லறை முன்பு ஒன்றாக முழந்தாழ் படியிட்டு இருந்தனர். இது கிறிஸ்துவினுடைய ஒன்றிப்பு செபத்திற்கு உயிர் கொடுக்கும் ஒரு நிகழ்வாக கருதப்படுகிறது.

"தந்தையே நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக." (யோவா. 17:21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாளர் யோசவாஸ் அடிகளாரின் விண்ணக வாழ்வின் மூன்றாம் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு இலங்கை ஆயர் பேரவை விடுக்கும் சுற்றுமடல்



எமது அன்புக்குரிய பொது நிலை, துறவற, திருநிலை நம்பிக்கை யாளர்களுக்கு,

இலங்கையின் திருத்தூதராம் அருளாளர் யோசவாஸ் அடிகளாரின் விண்ணகப் பிறப்பின் மூன்றாம் நூற்றாண்டின் நிறைவிலே எல்லாம் வல்ல இறைவனை நோக்கி நன்றி நிறைந்த உள்ளங்களோடு இம் மடலை வரைகின்றோம்.

**இறையருளின் ஆற்றல் :**

அருள்மிகுந்த இந்த சந்தர்ப்பத்திலே எமக்காக எமது திருத்தூதரின் வாழ்விலும், பணியிலும் வெளிப்பட்ட அளவிடமுடியாத இறையன்பை நினைவுகூர விளைகின்றோம். எகிப்திய அடிமைத்தனத்தில் துன்புற்ற மக்களின் அழுகுரலுக்குச் செவி மடுத்து அவர்களுடைய விடுதலைக்காக தம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட அடியாளாகிய மோசேயை அனுப்பியது போலவும் (விப 3:7 – 10) புறவினத்தவருக்கு திருத்தூதராக இருக்க தர்சு நகர் சவுலை அழைத்தது போலவும் (தி. ப. 9:15 – 17) எளிமையான ஒரு இந்தியக் குருவான யோசவாஸ் அடிகளாரை அதிசயிக்கத்தக்க விதத்தில் இலங்கையின் திருத்தூதராக இறைவன் அழைத்தார். யோசவாஸ் அடிகளாரை இலங்கைக்கு அழைத்த இறைவனின் செயலானது மனித இதயங்களிலே இறையருள் மறைமுகமாக செயலாற்றிய ஒரு சந்தர்ப்பமாகும்.

**இருண்ட காலம் :**

இலங்கைத் திருச்சபையின் இருண்ட காலம் 17ம் நூற்றாண்டின் நடுப்பகுதியோடு ஆரம்பமாகின்றது. கடலோர மாகாணங்களை ஆளும் குடியேற்றவாதிகளாக ஒல்லாந்தர் வருகை தந்தனர். அவர்களும் கிறிஸ்தவர்களாகவே இருந்த போதிலும் சில அரசியல் காரணங்களுக்காக கத்தோலிக்கரைக் கொடூரமாகத் துன்புறுத்த ஆரம்பித்தனர். கத்தோலிக்கம் தடை செய்யப்பட்டது. எல்லா கத்தோலிக்க ஆலயங்களும், பாடசாலைகளும் பறிமுதல் செய்யப்பட்டன. தமது விசுவாசத்தைக் கடைப்பிடிப்பதற்காக கத்தோலிக்கர்கள் அடிக்கப்பட்டனர் நாடு கடத்தப்பட்டனர் சிறையிடப்பட்டனர் தண்டப்பணம் செலுத்த நிர்ப்பந்திக்கப்பட்டனர். எல்லாவற்றிற்கும் கொடுமுடியாக கத்தோலிக்க மறைப்பணியாளர் அனைவரும் நாட்டை விட்டு துரத்தப்பட்டனர். குருக்களுக்கு மறைவிடம் கொடுக்கும் கத்தோலிக்கர்கள் மரண தண்டனைக்குரியவர்கள் என மிரட்டப்பட்டனர். இலங்கையில் வாழும் கத்தோலிக்கர்களுக்கு உதவ வென ஐரோப்பிய மறைப்பணியாளர்களை அனுப்ப பல தடவை திருச்சபையின் தலைமைப் பீடம் முயன்றது. ஆயினும் அம்முயற்சிகள் வெற்றி பெறவில்லை. இலங்கை வாழ் கத்தோலிக்கருக்கு பணியாற்ற ஒரு குரு கூட இல்லாத நிலையில் முப்பதாண்டுகள் கடந்தன.

**ஓர் ஒளியின் புறப்பாடு :**

எல்லா மனித முயற்சிகளும் தோல்வியுற்ற நிலையில், அளவு கடந்த இறையன்பினதும், பராமரிப்பினதும் செயற்பாடாக அதிசயமான, எவரும் எதிர்பார்க்காத முறையில் இறைவன் தனது நன்மைத்தனத்தில் இலங்கை வாழ் கத்தோலிக்கருக்கு உதவி கிடைக்க ஏற்பாடு செய்தார். இலங்கை வாழ் கத்தோலிக்கரின் கையறு நிலையைப் கேள்விப்பட்டதிலிருந்தே யோசவாஸ் அடிகளார் எனும் தூய்மை மிகு இளங்குரு எந்தவித சவால்களுக்கும், தளர்வுகளுக்கும் இடம் கொடுக்காமல் இறைவனின் அழைப்புக்கு தன்னையே முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். அதனால் இது ஒரு இணையற்ற வீரம் மிகுந்த மறைப்பணி வரலாறாக விளங்குகின்றது. உண்மையில் ஆசியா உருவாக்கிய மறைப்பணியாளர்களுள் தலைசிறந்தவராக இவர் கணிக்கப்படுகின்றார்.

**நன்றிக்கடன் பட்டுள்ளோம் :**

இன்று இறையருளினால் ஒரு துடிப்புள்ள கத்தோலிக்க குழுமத்தை இத்தீவிலே நாங்களும் கொண்டிருக்கின்றோம். இன்றும் எம்மைக் குருத்துவ துறவற அழைத்தல்களாலும் அர்ப்பணம் மிக்க பொதுநிலைப் பணியாளர்களாலும் ஆசீர்வதித்து வருவதையிட்டு நாங்கள் இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம். எனவே தன்னுடைய உயர்தூய்மையினாலும், ஆர்வம் மிக்க மறைப்பணியாலும் எமது முன்னோர்களின் விசுவாசத்தைப் பாதுகாத்த யோசவாஸ் அடிகளார் என்னும் கொடைக்காக நாம் எம் விண்ணகத் தந்தைக்கு நன்றிக் கடன்பட்டிருக்கின்றோம்.

அவரது மரணத்தின் மூன்றாம் நூற்றாண்டு இலங்கைத்திருச்சபைக்கு ஒரு அருளின் காலமாகும். இக்கொண்டாட்டம் பொருள் உள்ளதாக அமைய வேண்டுமானால் எமது காலத்தின் மெய்மைகள் ஊடாக தூய ஆவியார் என்ன சொல்கின்றார் என்பதை உய்த்துணர்ந்து அவரது குரலுக்கு செவி மடுப்பது அவசியமானதாகும். எந்த வித மனித வளமோ உதவியோ இல்லாத நிலையில் ஒரே ஒரு குருவினுடைய தூர நோக்கும் அர்ப்பணமும், இறைபராமரிப்பு மீதான நம்பிக்கையும் இவற்றையெல்லாம் சாதிக்க முடியும் என்று சொன்னால் மீட்பின் நற்செய்திக்கும் இயேசு ஆண்டவருக்கும் ஆவியில் நிறைந்த சாட்சிகளாக மிளிர எமக்கு வழங்கப்படும் அழைப்பை நாம் தட்டிக் கழிக்க முடியாது. ஆகவே அருளாளர் யோசவாஸ் அடிகளாரின் நினைவுகளை மீட்டிக் கொள்வதும் அவரது ஆர்வமிக்க மறைப்பணியின் வெற்றியின் இரகசியங்களை புரிந்து கொள்வதும் எமக்கு மிகவும் அவசியமாகும்.

**இறை பராமரிப்பில் நம்பிக்கை கொண்டவர் :**

இறை அழைப்புக்கு செவி மடுக்க யோசவாஸ் அடிகளார் செல்லத் தயாராக இருந்த தொலைவை நோக்கும் போது, அத்தகையதொரு மறைப்பணி கிறிஸ்தவ அழைப்பின் முக்கிய பரிமாணங்களாக கடவுள் மட்டிலான ஆழமான அன்பும் சக மனிதர் மட்டிலான நேசமும் நிறைந்திருந்த ஒரு இதயத்திலிருந்து தான் ஊற்றெடுக்க முடிந்திருக்கும் என்பதைப் புரிந்து கொள்ளலாம். அவர் இலங்கைக்குச் செல்லும் நோக்கோடு கோவாவில் இருந்த தமது துறவு மடத்திலே தங்கியிருந்த போது இரவு வேளைகளில் அவர் நற்கருணைநாதர் முன்பாக இலங்கை செல்வதற்கான வழியை தமக்கு திறந்து விடும்படி கோரி விம்மி அழுததை அவரது சக தோழர்கள் கண்டதாக அறிய முடிகின்றது. இத்தகையதொரு ஆழமான விசுவாசம் கொண்ட மனிதரால்தான் தான் பயணித்த நாளிலிருந்து எதிர்கொள்ள நேர்ந்த சவால்கள், தடைகள் மத்தியிலும் பின்பு சிதறுண்ட மந்தைகளைத் தேடி வனவிலங்குகளும், கொடிய நஞ்சுப் பாம்புகளும் நிறைந்த காடுகளினூடாக பயணிக்க நேர்ந்த வேளையிலும் தனது மறைப்பணி கனவில் நிலைத்திருக்க முடிந்திருக்கும். புறவினத்தவரின் திருத்தூதரான தூய பவுலைப் போல (2கொரி 11:23 – 26) பஞ்சமோ, நோயோ, ஆபத்துக்களோ, சிறையோ, பின்னடைவுகளோ இந்த வீரம் செறிந்த மறைப்பணியாளரை கடவுளால் வழங்கப்பட்ட பணியை நிறைவேற்றுவதிலிருந்து பின்வாங்கச் செய்ய முடியவில்லை. கடும் துன்புறுத்தல் மத்தியிலும் கத்தோலிக்க திருச்சபையை மீள உருவாக்குவதற்கு இவர் கையாண்ட மறைப்பணி அணுகுமுறைகள் ஆச்சரியப்படத் தக்கவையே.

**தமிழாக்கம்:**
**அருட்பணி. M.V.E. ரவிச்சந்திரன்**

# வளமாகும் குடும்ப வாழ்வு

## குடும்பப் பக்கம்

(தொடரும்....)

**அருட்பணி எஸ்.ஜே. இராஜநாயகம்**

### இலக்கு நோக்கி, பிள்ளைகள் நல்ல ஆளுமையில் வளர்ச்சி பெற அவர்களின் மனநிலையை மாற்றுவது எப்படி?



இப்படியான எண்ணங்கள் அல்லது பண்புகள் பிள்ளைகளின் வாழ்வில் சவாலாக வருகின்றது. தமது பெற்றோரால் "துணிவுள்ள", "கஷ்டமான", "கோபமான", "தொட்டாற் சிணுங்கி", "எதையும் சமாளிக்கும் திறன் கொண்டவர்" என்று வர்ணிக்கப்படும் பிள்ளைகள் அப்படியே நடந்து கொள்ளுகின்றனர். பெற்றோரின் எதிர்பார்ப்புக்களை அப்படியே நிறைவேற்றுவர்.

வேர்ஜீனியா டிமோஸ் (1999) என்பவர் குழந்தைகளின் உள விருத்தியியலில் ஆய்வு செய்தவர். இவரின் கூற்றுப்படி பெற்றோர் சொல்லுபவை ஒரு குழந்தை உண்மையென்று அப்படியே உணர்கின்றது. பெற்றோரினால் மிகைப்படுத்தப்பட்ட ஒரு பண்பை அறிவு ரீதியாக ஆராயும் திறன் ஒரு குழந்தைக்குக் கிடையாது. அந்தப் பண்பிற்கு எதிரான பண்புகளை சிந்திக்கும் ஆற்றல் அதற்கு இல்லை. இங்கு பெற்றோரின் தன்மயமாக்கப்பட்ட மிகைப்படுத்தப்பட்ட சாட்டுதல்கள் குழந்தைக்கு, பிற்காலப் பகுதியில் இளையோருக்கு உண்மையாகவும் வேதவாக்காகவும் இருக்கின்றது என்கிறார்.

ஆற்றுப்படுத்தலில் "உங்களைப் பற்றிய கதையைச் சொல்லுங்கள்" எனப் பணிக்கும் போது, அவர் தான் உணர்ந்தவற்றை கூறுவார். இவருடைய கதையைப் பகுத்துப் பார்க்கும்போது, அவை பெற்றோரினால் (சமூகத்தினால்) ஏனையோரால் புனையப்பட்டவை என்பதை அறிந்து கொள்ளலாம். உ-ம்: "நான் ஒரு விசர், ஏனென்றால் என்னை மற்றவர்கள் அப்படித்தான் அழைக்கின்றனர்". எனது ஆற்றுப்படுத்தலின் அனுபவத்தில் துணைநாடி வருபவரிடத்தில் நான் கண்டுபிடிக்கும் சில பண்புகளைப் பற்றிக் கூறுகின்றபோது அவர்கள் அந்தப் பண்புகளாக மாறுவதை நான் பார்த்திருக்கின்றேன். இப்படி ஒரு நபர் மாறுகின்றபோது நான் தன்னை பற்றி ஏற்கனவே உருவாக்கி வைத்திருக்கின்ற "படம்" உண்மையானது அல்ல என்று தீர்மானித்து புதிய கண்ணோட்டத்தில் தங்களைப் பார்க்கின்றனர்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை வேறு கண்ணோட்டத்தில் பார்க்கும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும். ஏற்கனவே வைத்திருக்கின்ற அமைவற்ற கண்ணோட்டத்தை தவிர்த்து வித்தியாசமான முறையில் பார்த்து தங்கள் பிள்ளைகளின் தனித்துவப் பண்புகளைக் கண்டு அறிந்து அவைகளைப் பிள்ளைகளுக்கு எடுத்துரைக்கும் போது அவர்கள் மகிழ்கின்றனர். தங்களைப் பற்றித் திருப்தியடைகின்றனர். உ-ம்: "நீ நன்றாக மற்றவருடன் பழகுவதை அவதானித்து இருக்கின்றேன் எனக்கு மகிழ்ச்சியாக இருக்கின்றது". "உன்னிடத்தில் புதிய சூழலை எதிர்கொள்ளும் திறன் இருக்கின்றது." "வேலை கடினமாக இருந்தாலும் நல்ல முயற்சியுடன் செயல்படுகின்றாய்." "இப்போது நீ கோபத்தை அடக்க பழகிக் கொண்டாய்" என்ற வளர்க்கவைக்கும் மொழிகளைப் பேசும் போது பிள்ளைகள் ஒன்றுபன் வளர்வதைப் பார்க்கலாம். பிள்ளைகளை சும்மா புகழாமல் இப்படி சொல்லும் போது, இப்படியான வார்த்தைகள் அவர்களைச் சிந்திக்க வைக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச் சரம்

## கடவுளைத் தேடு

'கடவுள் உன்னை எந்நேரமும்
தேடிக்கொண்டேயிருக்கின்றார்'

ஆனால்,
நீ அவரை எப்போது தேடுகின்றாய்?
உனக்குப் பிரச்சினைகள் வரும்போதா?
உன்னைத் துன்பமும் குறைகளும் தொடரும்போதா?
உன்மீது சுமைகள் சுமத்தப்படும்போதா?
"சுமையைச் சுமைக்கும்போதுதானே – வாழ்வில்
சுவையும் கிடைக்கின்றது."

தேடு! தேடு!
கடவுளையே முதலில் தேடு
உன் மனதிற்குள் அவரைத் தேடு.
உன் செயல்களில் அவரைத் தேடு.
உன் வார்த்தைகளில் அவரைத் தேடு.
உன் பழக்க வழக்கங்களில் அவரைத் தேடு.
அனைத்திற்கும் மேலாய்
உன் அயலானில் தேடு.

கடவுளை நீ சுவைத்தால்தானே
தேடும் ஆவல் தொடர்ந்து வரும்!
கடவுளை நீ சுவைத்துவிட்டாயா???

ஜிஸ்சி அன்ரனி
பாசையூர்

## புதிதாய்

அடுத்தவீட்டில், அவலக்குரல்,
ஐயோ! என்கின்ற ஓலம்.
என் வீட்டில், ஆட்டம், பாட்டம்,
என்றும் களியாட்டம்.
பக்கத்து வீட்டில் பரீட்சைக்காகப்
படிக்கும் மாணவன்.
என்வீட்டுத் தொலைக்காட்சியில்
இரைச்சலுடன் கதாநாயகன்.
முன்வீட்டு முதியோருக்கு
மூடத் துணியில்லை.
என்வீட்டுப் பெட்டகத்தில்
உடைவைக்க இடமில்லை.
எத்திசை திரும்பினும் ஏற்றமுடன்
கோவில் கோபுரங்கள்.
ஞாயிறு திருப்பலி கூடக்
காண்பதில்லை என் கேத்திரங்கள்.
"யூபிலி ஆண்டு" "எங்கள் குடும்பங்கள்
மீண்டும் புதிதாய் எழுந்திட."
என் குடும்பம் புதிதாய் எழுமா?
இல்லை பூமியின் ஆழத்துள் விழுமா?"

மாறுமா?

R.A. நாயகி
யாழ். புனித யாகப்பர் ஆலயம்,
குருநகர்.

## பேனா

உறவுகளின் அன்பை
அள்ளித்தருவது பேனா
கல்வியின் அந்நியாயத்தை
கட்டுவது பேனா
எல்லோரின்
தலையெழுத்தையும்
மாற்றுவது பேனா
சில வேளையில் சிறையில் கூட
தள்ளுவது பேனா
வாழ்வுக்கு நல்லதை
செய்வதும் பேனா
வேதனையில் விடுவதும்
பேனாதான்.

க. நிரஞ்சன்
கருமபுரம் முகாம்.

## காத்திருப்பு

[illegible]

க. கமலியூன்

# மக்களின் செபங்களில் நிறைந்திருப்பவள் புனித கன்னி மரியாள்!

அருட் சகோ. ரமேஸ் அ.ம.தி

கத்தோலிக்க திருச்சபை வரலாற்றில் மரியாள் வணக்கம் சிறப்பிடம் பெறுவது பேருண்மை. ஏனெனில் இறைவனுக்குகந்த இதயம் உடையவளாக விளங்குபவள் எம் அன்னை. மக்கள் இறைவனை நாடவும், தம் வாழ்வால் இறைவனைப் பிரதிபலிக்கவும் கற்றுக்கொடுத்து வழிகாட்டுபவர் அன்னையே. திருமறைத் தந்தையர்களும், திருச்சபையோடு ஒன்று பட்ட இறைவல்லுனர்களும், "மரியாள் துணையின்றி எந்த மனிதனும் ஈடேற்றம் அடைய முடியாது" என்று கற்பித்தனர். இறைவனின் மீட்புத்திட்டத்தை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். அதாவது 'மனுவுருவான அந்த அன்பு மகனாலே, அவருடைய இரத்தத்தின் வழியாய் இறைவனின் அருள் வளத்திற்கேற்ப நாம் மீட்படைகிறோம்' (எபே 1:7). 'கடவுள் ஒருவரே. கடவுளையும் மனிதரையும் இணைப்பவரும் ஒருவரே. இவர் மனிதனான இயேசுக் கிறிஸ்துவே. இவர் அனைவரின் மீட்புக்காக தம்மையே கையளித்தார்' (1திமோ 2:5-6). ஆனால் அவர் இம் மீட்புத் திட்டத்தை நிறைவேற்ற மனுக்குலத்தின் பிரதிநிதியாக புனித மரியாளையே தேர்ந்து கொண்டார். மரியாளோ 'ஆகட்டும்' என்னும் வாக்குறுதியால் இறைவனுக்கு கீழ்ப்படிந்து அவருடனும் எல்லாம் வல்ல இறைவனின் அருளால் மீட்புத் திட்டத்தில் பங்கேற்றாள் என சங்கவுரை கூறுகிறது. இதனால் அன்னையின் அளவற்ற வல்லமையை நம்பி, அன்னைக்குரிய அன்புணர்வோடு அவள் பதம் வரும் மக்களின் செபங்களில் அன்னை நிறைந்திருப்பது கண்கூடு.

இறைவனின் நித்திய திட்டத்தில மரியாளின் பொறுப்பு எத்தகையது என்பதைப் பற்றி திருத்தந்தை 10ம் பத்திநாதர் அழகாகக் கூறுகிறார். கன்னி மரியாளுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையே உள்ள மன ஒன்றிப்பு, பாடுகளின் ஒன்றிப்பு என்பவற்றால் மரியாள் கிறிஸ்துவோடு இணைந்து மனுக்குல மீட்புக்கு காரணமானாள். கிறிஸ்து தமது சொந்த இரத்தத்தை சிந்தி சம்பாதித்த பேறுபேறுகளை பகிர்ந்தளிப்பவளாக மரியாள் காட்சி தருகிறாள். ஆதலால் அவளே வரங்களை வளங்கும் முதல் பணியாளராகிறாள் என்கிறார் திருத்தந்தை. இவ்வாறு திருச்சபையின் தலைவர்களும் தந்தையர்களும் மரியாள் வணக்கத்தின் மேன்மையினையும், நாம் செபமாலை மூலமாக செபிக்க வேண்டியதன் தேவையினையும், முக்கியத்துவத்தினையும் எமக்கு கற்பிக்கிறார்கள். செபமாலையின் மூலமாக வரலாற்றில் திருச்சபை சாதித்த வெற்றிகளை சான்றாக கொண்டு மரியாள் ஊடாக இறைவனைப் புகழ, ஐப்பசி மாதத்தினை செபமாலை மாதமாக திருச்சபை கொண்டாடி வருகிறது. செபமாலையில் நாம் செபிக்கும் மறைநிகழ்ச்சிகள் மீட்புத்திட்டத்தில் இறைமகன் இயேசுவின் வாழ்க்கையையே எமக்கு புலப்படுத்துகிறது. மேலாக செபமாலையின் மூலமாக மரியாளுடன் இணைந்து அருள் வாழ்வில் பங்கெடுக்க அவர்களது படிப்பினைகள் எம்மை அழைத்து நிற்கின்றன.

மரியாள் என்னும் மறைபொருள் இறைவனின் ஞானத்திலே அவரது மேலான திட்டத்திலே தோன்றியதொன்றாகும். இதன் உண்மைத் தன்மையை ஆழ்ந்த விதத்திலே சிந்தித்து அவற்றின் ஒளியில் நமது விசுவாச வாழ்வை கட்டியெழுப்புவதுதான் மரியாள் வணக்கத்தின் நோக்கமாகும். எனவே மரியாள் வணக்கம் என்பது வெறும் உணர்ச்சி சம்மந்தமானதொன்றல்ல. அவ்வாறிருப்பின் மரியாளை நாம் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை என்பதுதான் அர்த்தம். நற்செய்தியில், மரியாள் இறைவனின் வார்த்தையை ஏற்று அதன்படி தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்ற மாதிரிகையுள்ள கன்னியாக, பொறுப்புள்ள ஓர் அன்னையாக சித்தரிக்கப்படுகிறாள். கடவுளின் திட்டத்தில் நம்பிக்கை கொண்டு, அவர் செயலிலே ஓர் தெளிவைப் பெற்று, இயேசுவை யாரென தன் உள்ளத்தில் சரியாக இனங்கண்டு, அவருடைய சீடர்களுக்கும், மக்களுக்கும் இயேசுவை வாழ்வதற்கு மாதிரிகை காட்டியவள்தான் அன்னை மரியாள்.

கிறிஸ்தவர்களாகிய எமது விசுவாச வாழ்வில் நடுநாயகமாகத் திகழ்பவர் கிறிஸ்துவே. அவரது பாடுகள், மரணம், உயிர்ப்பு என்ற மறைபொருளில் தான் எமது கிறிஸ்தவ விசுவாசம் கட்டப்பட்டுள்ளது. அந்தவகையில் கிறிஸ்துவோடு இணைந்து மனுக்குலத்தின் மீட்புக்காக தன்னை தியாகம் செய்த வீரநங்கையாகிய எமது அன்னையை எம் மனங்களில் சுமப்பதும் எமது செபங்களில் இணைப்பதும் தகுதியானதே. அன்னையை 'அம்மா' என்ற உன்னத வார்த்தை மூலமாக உறவு கொண்டாடும் நாம், அன்னையின் வாழ்வில் ஒளிர்விட்ட சிறந்த பண்புகளும் மதிப்பீடுகளும் எமது வாழ்விலும் உருவம் பெற நாம் அன்னையின் மூலமாக செபிக்க வேண்டும். வாழ்வின் அன்றாட பிரச்சினைகளையும், சவால்களையும் நம்பிக்கையோடு எதிர் கொள்ள செபமாலை தியானம் எம்மை இட்டுச் செல்லவேண்டும். இந்த மனநிலையோடு இம்மாதம் முழுவதும் செபமாலை தியானத்தினூடாக இறைவனின் அருளை நாடுவோம். இம்மானிலத்தின் ஈடேற்றத்திற்காக அன்னையை மாதிரிகையாக்கி இயேசுவின் வழியில் இறைவனிடம் செபிப்போம்.

# குமுழமுனை புனித அந்தோனியார் ஆலயத்தில் மறைக்கல்வி மாணவர்கள், மறையாசிரியர்கள், இளைஞர்கள், இணைந்து நடாத்திய ஒன்று கூடல் நிகழ்வு

J. மக்சனா
மறையாசிரியர்
புனித அந்தோனியார் ஆலயம்

யுத்தம் காரணமாக மிக நீண்ட காலமாக எமது ஆலய சிறார்களின் சந்திப்பு, ஒன்று கூடல் இல்லாமல் இருந்தது. இதனால் எமது சிறுவர்களின் வளர்ச்சி, இறைபக்தி குன்றிச் சென்றது உண்மை. இதை நிவர்த்தி செய்யும் முகமாக ஆலய முதுகெலும்பான இளைஞர்கள், மறையாசிரியர்கள், மாணவர்கள் இணைந்து இன்றைய எமது சிறுவர்கள், நாளைய தலைவர்கள் என்ற எண்ணத்தைக் கருத்தில் கொண்டு எமது சிறுவர்களை சிறு கருவிகளாகப் பயன்படுத்தி எமது பங்கை நேரிய பாதையில் நடத்திச் செல்ல வேண்டும் என்ற நோக்கோடு, இவர்களுக்கான சிறு ஒன்றுகூடல் நிகழ்வை நடாத்தினோம். இவ் ஒன்றுகூடல் நிகழ்வானது கடந்த 25/08/2010 அன்று புதன்கிழமை காலை 9.00 மணியளவில், குமுழமுனை புனித அந்தோனியார் ஆலய வளாகத்தில் பங்குத் தந்தை அருட் திரு. மரியதாஸ் அடிகளார் அவர்களின் ஆரம்ப வழிபாட்டுடன் ஆரம்பமாகியது. அதனைத் தொடர்ந்து சிறுவர்களின் ஆளுமையை விருத்தி செய்யும் நோக்கோடு விளையாட்டுக்களும், போட்டிகளும் திறமைகளை வெளிக்கொணர்வதற்காக கலை நிகழ்வுகளும், ஒற்றுமையை வளர்ப்பதற்காக மதிய உணவுப் பகிர்வும் இடம்பெற்றன. ஈற்றில் பங்குத் தந்தையால் பங்கு பற்றிய சிறுவர்களுக்கும், வழி நடத்திய மறையாசிரியர்களுக்கும் பரிசில்கள் வழங்கி

(தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 28 - 07 - 1940

இறப்பு 24 - 10 - 2009

அமரர்

**ஆசை யேசுதாசன் (மகராசம் பிள்ளை)**

"ஆவை கடந்து சேர்ந்திருப்போமே
என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு
இளைப்பாறுதல் தருவேன்."

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
சகோதரர், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் உற்றார்
உறவினர்

5ம் குறுக்குதெரு,
யாழ்ப்பாணம்.

Advt-71/10

# 6ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 11.04.1939 இறப்பு 04.10.2004

**ஆசைப்பிள்ளை சாள்ஸ்**

(மண்டைதீவு)

பாசத்தை உங்கள் வளர்ப்பிலே - கண்டோம்
தியாகத்தை உங்கள் வாழ்விலே - கண்டோம்
உதிரத்தை உழைப்பிலே - கண்டோம்
உழைப்பில் எம் வாழ்வையே - வாழ்ந்தோம்

கண்ணை இமை காப்பது - போல்
பாமவர் எம்மை அறிவோடு கூடிய நற்பழக்கங்களை
புன்சிரிப்போடு வளர்த்தீரே! ஐயா! - உம்
புன் சிரிப்பைக் காண ஏங்குகின்றோம்
மழலைகள் நாங்கள்.
உங்கள் ஆன்மா இறைவனில் மகிழ்ச்சி கொள்வதாக!

அருட்தந்தை சா. ஜஸ்ரின்
(மகன்)

Advt-72/10

# 09 முதல் 15 வரையான குருத்துவ வாழ்வை நிறைவு செய்த குருக்களுக்கான ஒன்று கூடல்

1995 – 2001 வரையான குருப்பட்டம் பெற்ற யாழ் மறைமாவட்ட குருக்கள் புங்குடுதீவு சவேரியார் ஆலயப் பங்கில் 12. 09. 2010 அன்று மாலை ஒன்றுகூடினர்.

முதல்நிகழ்வாக நற்கருணை ஆராதனை அருட்பணி. A ஆனந்தகுமாரின் நெறிப்படுத்தலில் இடம் பெற்றது. அதன் நிறைவில் "கிறிஸ்தவ குருத்துவம் உலகைத் தூய்மைப் படுத்தும் உன்னத பணி" என்னும் பொருளில் அருட்பணி. M.V.E ரவிச்சந்திரனின் வழிகாட்டலில் ஓர் உரையாடல் நடைபெற்றது. மறுநாட்காலை மறைமாவட்ட குருக்கள் ஒன்றிய தலைவர் அருட்பணி A யாவிஸ் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் காலை 10.30 மணிக்கு மறைமாவட்ட குருமுதல்வர் அருட் பணி. B ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் தலைமையில் கூட்டம் இடம் பெற்றது. அதில் பயனுள்ள விடயங்கள் பல கலந்துரையாடப்பட்டன. மதிய விருந்துடன் ஒன்றுகூடல் நிறைவுக்கு வந்தது. மறைமாவட்ட குருக்கள் ஒன்றியத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட இந்நிகழ்விற்கு புங்குடுதீவு பங்குத்தந்தை அருட்பணி. T லியோ ஆம்ஸ்ரோங் நல்ல ஒத்துழைப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. 15 குருக்கள் இவ் ஒன்றிப்பில் கலந்து கொண்டனர்.

தகவல்: அருள்

# யாழ் மறைமாவட்ட இளையோர் ஒன்றுகூடல் - 2010
## கருத்துப் பரிமாற்றத் தொகுப்பு (சென்ற இதழ் தொடர்ச்சி..)

1. **பழமை வாதம்**

சமூகத்தில் மூத்தவர்கள் பழமைவாதிகளாக காணப்படுவதும் அவர்கள் தற்கால மாற்றங்களோடு ஒத்துப்போக மறுப்பதும் அவற்றின் நன்மைகளை ஏற்றுக் கொள்ளாது எதிர்ப்பதும் இளையோர்களோடு அவர்களை முரண் நிலைக்கு இட்டுச் செல்கிறது. மேலும் இளையோரையும் பழமைவாதிகளாக மாற்ற முனைகின்றது.

2. **பொருளாதாரச் சிக்கல்**

போரினால் ஏற்பட்ட பொருளாதார பாதிப்புக்களோடு சேர்த்து விலைவாசி உயர்வினாலும் சமூகம் பாதிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் தமது கல்விக்கும் தேவைக்கும் ஏற்ற வேலை வாய்ப்புக்களை பெறமுடியாத நிலை எமது இளைய சமூகத்தை பெரும் பாதிப்புக்கு உள்ளாக்குகின்றது. இது அலைச்சலையும், விரக்தியையும் ஏற்படுத்தி பொது விடயங்களில் பங்களிப்புச் செய்ய தடையாக உள்ளது.

3. **பாதுகாப்பின்மை**

போரில் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள் இளையோர்களே. ஏற்கனவே ஏற்பட்டுவிட்ட இழப்புகளுக்கு அப்பால் இப்போதும் ஆபத்தான நிலைகளை எதிர்கொள்ள வேண்டிய பாதுகாப்பற்ற நிலையிலேயே இளைய சமூகத்தினர் காணப்படுகின்றனர்.

4. **வெளிநாட்டு மோகம்**

உள்நாட்டிலுள்ள குழப்பமான நிலையும் வசதி வாய்ப்பற்ற தன்மைகளும் வெளிநாடு சென்றவர்களின் வசதியான வாழ்வு தொடர்பான ஈர்ப்பும் எமது இளையோரை வெளிநாட்டு மோகம் கொண்டோராய் மாற்றி விடுகின்றது. இதனால் எப்படியும் வெளிநாடு சென்று விட வேண்டும் என்ற ஆர்வத்தோடு அதற்காக எதையும் இழக்கத் தயாராவதையும் உள்நாட்டில் வாழும்போது கூட வெளிநாட்டுக் கலாச்சார மோகத்துள் ஆட்பட்டிருப்பதையும் அவதானிக் கலாம்.

5. **பிளவுபட்ட குடும்பவாழ்வு**

போரின் பாதிப்பால் பல குடும்பங்கள் பிரிந்துள்ளன. இன்னும் பல்வேறு சமூகப் பொருளாதார காரணங்களால் விவாகரத்துக்கள் அதிகரித்து குடும்பங்கள் பிரிகின்றன. மேலும் சேர்ந்து வாழ்ந்தாலும் தாய் தந்தையிடையில் முரண்பாடுகள் வலுத்து பிளவுபட்ட குடும்பங்களே காணப்படுகின்றன. இதனால் இளையோர் தமது குடும்பத்தாரிடம் குழம்புவதும், பெற்றோரோடு முரண்படுவதும் விரைவில் தமது குடும்பத்திலிருந்து விலகி விடுவதற்கு இளவயதில் திருமணம் செய்வதும், சீரழிவுச் செயற்பாடுகளில் ஈடுபடுவதும் அதிகரித்து வருகின்றது.

### பங்குத் தளங்களில் இளையோருடைய பங்கேற்பை அதிகரிக்க தடையாக இருக்கும் காரணிகள்

1. **இளையோரின் விழிப்புணர்வு இன்மை**

இளையோர் மத்தியில் தமது கிறிஸ்தவ கடமைகள் தொடர்பாக விழிப் புணர்வின்மை பரவலாகக் காணப்படுகின்றது. வாழ்வும் வழிபாடும் பிளவுபட்ட நிலையில் அவர்கள் திருச்சபையில் தமது பொறுப்பு பற்றி எந்தவித ஈடுபாடும் இல்லாதிருக்கின்றனர்.

2. **இளையோரது தேவைகள் சந்திக்கப்படாமை**

பங்கில் இளையோரை ஒன்று சேர்க்க உதவக்கூடிய கல்வி மற்றும் விளையாட்டுக்கான போதிய வசதிகள் செய்து கொடுக்கப்படாமை அவர்களை அந்நியப்படுத்துகின்றது.

3. **பங்குத்தந்தையின் அக்கறையின்மை**

பல பங்குத் தந்தையர்கள் இளையோர் பணிபற்றிய அக்கறை அற்றிருப்பதையும் அவர்களை ஒன்றிணைக்கத் தயங்குவதையும் அவதானிக்கலாம். மேலும் சிலரின் அதிகாரப் போக்கு இளையோரை அவர்களிடம் நெருங்கிச் செல்லாமல் தடுக்கிறது.

4. **மூத்தோரின் நிராகரிப்பு**

பங்கிலுள்ள மூத்தோர் பலர் இளைஞர்களைத் தட்டிக் கொடுத்து வழி காட்டுவதற்குப் பதிலாக குறை பிடிப்பதிலும் பகிரங்கமாக அமைதிப்பதிலும் ஈடுபடுகின்றனர். இன்னும் இளையோருடைய கருத்துக்களுக்கும் இடம் கொடுப்பதில்லை. இதனால் இளையோர் ஒதுங்கிச் செல்கின்றனர்.

(தொடரும்)

# பருத்தித்துறை மறைக்கோட்ட புதிய மேய்ப்புப்பணிச் செயற்பாடுகள்

## தூய பிரான்சிஸ் சவேரியார் ஆலயம், சற்கோட்டை

பருத்தித்துறை மறைக்கோட்ட மேய்ப்புப் பணிச் செயற்பாடுகள் புத்தூக்கத்துடன் நடைபெற்றுவருவது மகிழ்ச்சி தருகின்றதொன்றாகும். மறைக்கோட்ட அருட்பணியாளர்களின் மாதாந்த தியானங்கள், ஒன்றுகூடல்கள், திட்டமிட்ட செயற்பாடுகள் பல நன்மைகளை மக்களுக்கு அளித்து வருகின்றன. மறைமாவட்ட ஆணைக்குழுக்களின் கோட்ட இணைப்பாளர்கள் தமக்கென கொடுக்கப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றி மேய்ப்புப் பணிச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறார்கள். இதன் அங்கமாக அருட்பணி அகஸ்ரின் அடிகளாரின் ஊக்குவிப்பில் மிருசுவில் பங்கில் நடந்த அன்பிய ஊக்குவிப்பாளர்களுக்கான ஒரு நாள் பயிற்சியைக் குறிப்பிடலாம். மாதாந்தம் 2$^{th}$ சனிக்கிழமை மறைக் கோட்ட அன்பிய பிரதிநிதிகள் ஒன்று கூடுவதும் அன்பிய செயற்பாடுகளை முன்னெடுப்பதும் பயன்தரும் ஒரு அம்சமாகும். இரண்டாவது சந்திப்பு வரும் 9$^{th}$திகதி காலை 10மணிக்கு கொடிகாமம் தூய பேதுருவானவர் ஆலயத்தில் நடைபெறவிருக்கிறது.

மறைக்கோட்டத்திற்கான புரட்டாதி மாதக் கூட்டம் மணற்காட்டு பங்கு மனையில் கடந்த 16$^{th}$ திகதி மறைக் கோட்ட முதல்வர் அருட்பணி யோண் மவுலிஸ் அடிகளாரின் தலைமையில் இடம் பெற்றது. திருச்செபமாலையுடன் ஆரம்பித்த மாதாந்த தியானமானது மறைக் கோட்டக் குருக்களின் கூட்டத்தோடும், பல மேய்ப்புப்பணித் தீர்மானங்களுடனும் நிறைவு பெற்றது. அதில் மறைக்கோட்டத்தில் நடக்கவிருக்கும் சிறப்பு நிகழ்வுகள் பற்றி கலந்துரையாடப்பட்டது. அதன்படி மறைக் கோட்டத்திலுள்ள சகல பீடப் பணியாளர்களுக்குமான ஒன்று கூடல் ஐப்பசி 8$^{th}$திகதி மாலை 5மணி தொடக்கம், 9$^{th}$திகதி மாலைவரை சற்கோட்டை தூய பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தில் அருட்தந்தையர்கள், பத்திநாதர், தயாகரன் அடிகளாரின் நெறிப்படுத்தலில் நடைபெறும் என்று தீர்மானிக்கப்பட்டது.

அடுத்து, 2011ம் ஆண்டிற்கான மறைக்கல்விப் பாட ஆயத்தப் பயிற்சியும், மறைக்கோட்டத்திலுள்ள சகல மறையாசிரியர்களுக்கான ஒன்றுகூடல் கார்த்திகை 19$^{th}$, 20$^{th}$ திகதிகளில் பருத்தித்துறை தூய தோமையார் ஆலயத்தில் நடைபெறும் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

அடுத்து, 2011ம் ஆண்டிற்கான மறைக்கல்விப் பாட ஆயத்தப் பயிற்சியும், மறைக்கோட்டத்திலுள்ள ஆலயங்களின் அருட்பணி சபையில் இருந்து இரு பிரதிநிதிகளை அழைத்து, அவர்களுக்கான கருத்துக்களை வழங்கி மறைக்கோட்ட அருட்பணிச்சபை ஒன்றை உருவாக்கி எதிர்கால திட்டங்கள் பற்றி கலந்துரையாடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அடுத்ததாக திருப்பாலத்துவ சபைக்கும், இளைஞர் மன்றத்திற்கும் இடைப்பட்ட நிலையில் இருக்கும் பெண் பிள்ளைகளைக் கருத்திற் கொண்டு அவர்களுக்கென ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை உருவாக்க வேண்டுமென ஆலோசிக்கப்பட்டது. அதைப்பற்றி கற்றறிந்து மறு கூட்டத்தில் அறிக்கை சமர்ப்பிக்க அருட்தந்தையர்கள் பத்திநாதரும் தயாகரனும் கேட்கப்பட்டனர். முடிவாக ஐப்பசி மாதத்திற்கான ஒன்று கூடலும் தியானமும் அச்சுவேலிப் பங்கில் ஐப்பசி 14ம் திகதியென நிர்ணயிக் கப்பட்டது.

அருட்பணி. அகஸ்டின்
செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...நகர சபை, யாழ்ப்பாணம்.



## குழமுனை புனித அந்தோனியார் ஆலயத்தில்.. (6ம் பக்கத் தொடர்ச்சி)

கௌரவிக்கப்பட்டது. நிகழ்வுகள் மாலை 7.30 மணியளவில் நிறைவு பெற்றது. இந்நிகழ்வில் 19ம் கட்டை புனித டொன் பொஸ்கோ நிறுவன இயக்குனர் அருட்தந்தை செபஸ்ரியன், அருட்சகோ தரர்களான ப. சுமன், பி. றெஷன், கி. றஞ்சித்குமார். இரணை மாதாநகர் திருக்குடும்ப கன்னியர் மட அருட்சகோதரிகள்: கிறேஸ்மேரி, யூஜின் அமல அன்னை அன்பக சிறுவர்கள், குமுழ முனை அ.த.க பாடசாலை, கத்தோலிக்க ஆசிரியர்கள், துணை ஆலய மறை யாசிரியர்கள், ஆலய மக்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

## பற்றீஷியன் தொழிற்பயிற்சி நிறுவனங்களின்.... (1ம் பக்கத் தொடர்ச்சி)

**வழங்கப்படும் கற்கை நெறிகள்:**

| | |
|---|---|
| 01. COMPUTER COURSES | |
| 02. SHORT HAND AND TYPING (Eng. &Tamil) | (6 Months) |
| 03. GENERAL MOTOR MECHANISM | |
| (Petrol & Diesel வாகனங்கள்) | (6 Months) |
| | (6 Months) |
| 04. GENERAL ELECTRICIAN (Wiring & Winding) | (6 Months) |
| 05. RADIO & T.V. REPAIRING | (8 Months) |
| 06. LATHE MACHINE OPERATION | (3 Months) |
| 07. ARC WELDING | (3 Months) |
| 08. CARPENTRY (With use of machinery) | (6 Months) |
| 09. PLUMBING | (6 Months) |
| 10. REFRIGERATION AND AIR CONDITIONING | (6 Months) |

ஆகிய பயிற்சிகள் வழங்கப்பட்டு, அரச அதிகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படுகின்றன. இந்நிறுவனம் மூன்றாம் நிலை கல்வி, தொழிற்கல்வி ஆணைக் குழுவின் (TVEC) அங்கிகாரம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொடர்புகளுக்கு: தொ.பே. 021 222 6148

## இளம் குருக்களுக்கு நடைபெற்ற தொடர் பயிற்சி செயலமர்வு

01 முதல் 08 வரையான குருத்துவ வாழ்வை நிறைவுசெய்த குருக்களுக்கான தொடர்பயிற்சி செயலமர்வு 19-09-2010 முதல் 22-09-2010 வரை பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் நடைபெற்றது.

முதல் நாள் "யுத்த சூழலின் பின் குருவாக இருத்தலும் பணிசெய்தலும்" என்ற கருத்துரையை உள வியல் - ஆன்மீக தளத்தில் அருட்பணி. றெக்ஸ் கொண்ஸ்ரன்ரைன் CMF வழங்கினார். அடுத்த நாள் "பங்கேற்கும் திருச்சபையின் நோக்கும், பங்கில் பங்கேற்பு கட்டமைப்புக்களை உருவாக்குவதும், நெறிப்படுத்துவதும" என்ற தொனிப் பொருளில் அருட்பணி. ம.இ.வி ரவிச்சந்திரன் இளம் குருக்களோடு உரையாடினார். தொடர்ந்து பொதுவான பங்குசார் விடயங்கள் குருக்களிடையே கலந்துரையாடப்பட்டன. மாலை நிகழ்வாக இடம்பெற்ற "பொதுநிலையினர் இறைவனின் திராட்சைத்தோட்டத்தில் உடன் பொறுப்பாளர்களும் உடன் உழைப்பாளர்களும்" என்ற கலந்துரையாடல் மறைமாவட்ட பொதுநிலையினர், இளைஞர் கழகங்கள், இளம்குருக்கள் ஆகியோருக்கிடையே நடைபெற்றது.

பின் ஆயர்தலைமையில் இடம் பெற்ற கூட்டத்தில் பல விடயங்கள் பேசப்பட்டன. மறுநாள் "திரு மணத்தின் திருச்சபைச்சட்டம் மற்றும் திருப் பணிசார்ந்த கூறுகள்" பற்றி அருட்பணியாளர்கள் ப.ி ஜே. கிருபாகரன் எஸ். ஜே. இராசநாயகம் ஆகியோரால் உரையாடல் வழி நடாத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து பங்கின் நிர்வாகம் பற்றி அருட்பணி.ஜே.பி. அன்ரனிதாஸ் கருத்துரை வழங்கினார். நிறைவில் இக் கருத்தரங்கு பற்றிய ஒரு மதிப்பீட்டு உரையாடலுடன் நான்கு நாள் கருத்தமர்வு இனிதே முடிவுற்றது. மறைமாவட்ட குருக்கள் ஒன்றியம் இந்நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கார்டினல் நியூமன் முத்திப்பேறு பெற்றார்

பிரித்தானியாவிற்கு நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டிருந்த திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள் தனது தரிசிப்பின் மைய நிகழ்வாக கார்டினல் ஜோண் கென்றி நியூமன் அவர்களை முத்திப்பேறு நிலைக்கு உயத்தி சமூகத்திற்கு அவரது உயிர்த்துடிப்புள்ள வாழ்வு எடுத்துக்காட்டாக அமையவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

## சுண்டுக்குளி திருமுழுக்கு யோவான் ஆலய வழிபாடுகள்

- ✝. ஒவ்வொரு புதன்கிழமையும் மாலை 4.30 மணிக்கு சதா சகாய அன்னையின் நவநாளும் நற்கருணை ஆசீரும்.
- ✝. ஒவ்வொரு சனியும் காலை 6.00 மணிக்கு ஆங்கில திருப்பலி.
- ✝. ஒவ்வொரு மாதமும் 13ம் திகதி மதியம் 12.00 மணிக்கு கண்ணீர் மாதாவின் பிராத்தனையும் செபமாலையும் (4 காரணிக்கம்)

தகவல்: அருட்பணி S.J.Q ஜெயறஞ்சன்

## முத்திப்பேறு பெற்ற இளம் பெண்

எலும்பு புற்றுநோய் காரணமாக சியறா படானோ என்ற இத்தாலியை சேர்ந்த இளம்பெண் தனது 19வது வயதை அடைவதற்கு சற்றுமுன் இறந்து போனாள். திருத்தந்தை அவளை முத்திப்பேறு நிலைக்கு உயர்த்தி இப்பெண் தனது துன்பம் - சாவை விட கடவுளின் அன்பு பலமானது என்று சாட்சியம் பகர்ந்துள்ளாள் அதனால் இளையோரே இப்பெண்ணிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள் என்று கூறியுள்ளார்.

## கரித்தாஸ் - கியூடெக் புதிய.. (1ம் பக்கத் தொடர்ச்சி)

போர் நெருக்கடியின் போது யாழ் மக்கள் தமது வாழ்வாதாரங்களை பறிகொடுத்து நிர்க்கதியாக நின்ற அகால நாட்களில் அம்மக்களுக்கு இத் தொண்டுநிறுவனம் தன் பணிகளை நேர்த்தியாக செய்து முடித்ததையும் எத்தனையோ ஏழை எளியவர்கள் இந்நிறுவனத்தின் உதவியினால் ஆறுதலடைந்ததையும் ஆயர் நினைவுகூர்ந்தார்.

கரித்தாஸ் - செடெக் நிறுவனத்தின் தேசிய இயக்குநர் ஜோர்ச் சிகாமணி கரித்தாஸ் - சுலோ வேனியாவிலிருந்து வருகை தந்த அருட்பணி. ஸ்ரான் கெறின் அனர்த்த முகாமைத்துவ முகாமை யாளர் திரு. தேய்வேந்திரராஜா நிவாரணம் மற்றும் மிள்குடியேற்ற உதவி முகாமையாளர் திரு. குயின் ரஸ் அந்தோனிப்பிள்ளை வன்னி மறைக்கோட்ட கரித்தாஸ் - கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்பணி. ஏ. யாவிஸ் மற்றும் அதிகாரிகள் பணியாளர்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## திருக்குடும்ப கன்னியர் மட...... (1ம் பக்கத் தொடர்ச்சி)

அருட்சகோதரி தாஸ்நெவிஸ் லடிஸ் லோஸ் தலைமையில் ஒரு சிறப்பு நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு வடமாகாண ஆளுநர் மேயர் ஜெனரல் G.A. சந்திரசிறி முதன்மை விருந்தினராக கலந்துகொண்டார். மதிப்பமை விருந்தினராக யாழ் ஆயர் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் திரு. T. செல்வரத்தினம், வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி A வேத நாயகம், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் திரு. கனகரட்ணம் , பழைய மாணவர் சங்க உபதலைவி செல்வி வயலற் இம்மானுவேல் ஆகியோர் கலந்து கொண்டனர். மாணவிகளின் கலை நாட்டிய அரங்கேற்றம் நிகழ்வைச் சிறப்பித்தது. இந்நிகழ்விற்கு குருக்கள், கன்னியர்கள், பழைய மாணவிகள், நலன் விரும்பிகள், பெருந தொகையாக வருகை தந்திருந்தனர்.

இப் பாடசாலை தேசிய பாட சாலையாக தரமுயர்த்தப்பட்டமை குறித்து இதன் அதிபருக்கும் இப் பாட சாலை சமூகத்திற்கும் பாதுகாவலன் தனது மகிழ்ச்சியையும் வாழ்த்துக் களை பகிர்ந்துகொள்கிறது.

## அமெரிக்காவில் "திருக்குர்ஆன்" எரிக்கும் திட்டத்தை வத்திக்கான் மத நல்லிணக்க சபை கண்டிக்கிறது

திருக்குர்ஆன் இஸ்லாமியரின் புனிதநூல். இந்நூலின் பிரதிகளை பகிரங்கமாக எரிப்பதற்கு அமெரிக்காவிலுள்ள கெயினேஸ்விலே எனுமிடத்திலுள்ள ஒரு சிறு அடிப்படைவாதக் குழு திட்டம் தீட்டியுள்ளது. இதை வத்திக்கான் மதநல்லிணக்க சபை ஒரு அவமானமான செயல் என்றும் பாரதூரமான நடவடிக்கை என்றும் கூறி கண்டிக்கிறது.

## சுண்டுக்குளிப் பங்கின் மறைக்கல்வி தினமும் மறையாசிரியர் கௌரவிப்பும்

### இறைவனால் அழைக்கப்பட்ட அற்புதமான அருங்கொடைகள் பெற்றவர்கள் தான் மறையாசிரியர்கள்

தூய திருமுழுக்கு யோவான் ஆலயமும் தூய திரேசாள் ஆலயமும் இணைந்து மறைக்கல்வி தினத்தை 19-09-2010 அன்று மிக சிறப்பாக கொண்டாடினர். காலை 8.30 மணிக்கு திருப்பலி இடம் பெற்றது. இப் பலியை அருட்பணி. S. பிரான்சிஸ் ஜெயம் (CR) அடிகள் நிறைவேற்றினார். மாணவர்கள் ஆசிரியர்கள் இணைந்து ஒப்புக்கொடுத்த பலியின் நிறைவில் மறையாசிரியர்கள் தீபமேந்தி தம் அர்பணத்தை புதுப்பித்து கொண்டார்கள். பின்பு 10.00 மணியளவில் மாணவர்களின் காலை நிகழ்வுகள் இடம் பெற்றன. இவ்வேளையில் ஆண்டு 1-11 வரை கற்பிக்கும் மறையாசிரியர்கள் மேடையில் அமர்த்தப்பட்டு மாணவர்கள் தம் ஆசிரியர்களுக்கு மாலை அணிவித்து கௌரவித்தார்கள். பிரதம விருந்தினராக அழைக்கப்பட்ட அருட்பணி S. பிரான்சிஸ் ஜெயம் அடிகள் தமது வாழ்த்துரையில் மறையாசிரியர்கள் இறை வார்த்தையை தம் வாழ்வில் செயல் வடிவம் கொடுத்து வாழ்ந்து காட்டினால்தான் மாணவர்கள் மனதில் இறை வார்த்தையை விதைக்க முடியும் என்று கூறினார்.. அருளாளர் யோசவாஸ் பற்றி பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.



தகவல் : ஆசிரியர் டெய்சி. தவராஜா

அருட்பணி S. பிரான்சிஸ் ஜெயம் (CR)

"ஆண்டவராம் கிறிஸ்து யேசுவைப் பற்றி அறிவதே நாம் பெறும் ஒப்பற்ற செல்வம்" (பிலிப் 3:8).

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 340, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2010 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org